E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஓகஸ்ட் 26 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 202 | Saturday 26, August, 2023 | 10 பக்கங்கள்

'தமிழர் பெருவிழா'வுக்கு

## பிரதம அதிதியாக மனோ MP கனடா பயணம்



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் நேற்று கனடா பயணமானார்.

கனடாவின் டொரொன்டோ நகரில் நடைபெறும் 06

# அதிக வருமானம் ஈட்டும் சுற்றுலா பிரதேசமாக 'அறுகம்பே' அபிவிருத்தி

## மிக விரைவாக அமுலாக்கி செயற்படுத்த தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி தெரிவிப்பு





- கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை 02 கட்டங்களின் கீழ் 10 வருடங்களில் முழுமையான அபிவிருத்தி...
- அறுகம்பே குடிநீர் பிரச்சினையை உடனடியாக தீர்க்குமாறு ஜனாதிபதி பணிப்புரை...
- வர்த்தக சமூகம் எதிர்நோக்கும் காணி உறுதிப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு...

அம்பாறை, அறுகம்பே சுற்றுலா வலயத்தை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை அடையாளம் கண்டு, முறையான திட்டத்தினூடாக அந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, பிரபலமான நீர் சறுக்கு போன்ற விளையாட்டுக்களை அறுகம்பே

கடற்பிரதேசத்தில் ஊக்குவிப்பதன் மூலம் அதிக வருமானத்தை ஈட்டுவதற்கான வாய்ப்பு தொடர்பாகவும் சுட்டிக்காட்டினார்.

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களுடன் நேற்று (25) காலை நடைபெற்ற சந்திப்பிலேயே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கான இந்தக் கலந்துரையாடலில், அரச அதிகாரிகள் மற்றும் சுற்றுலாத்துறையில் பணியாற்றுவோர் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் 2035ஆம் ஆண்டளவில் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% சுற்றுலாத்துறையின் மூலம் ஈட்டப்படுமென சர்வதேச அறிக்கைகள் சுட்டிக்காட்டுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையும் அதற்கு தயாராக இருக்க வேண்டுமென்றும் சுற்றுலாத்துறை வருமானத்தினூடாக இலங்கையின் நிதிப் பிரச்சினைகளுக்கு நேரடி தீர்வு பெற முடியுமென்றும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை இரண்டு கட்டங்களாக அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் அடுத்த 10 வருடங்களுக்குள் அதனை நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 06

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட அனர்த்தம்;

## இலங்கைக்கு 850,000 மில். ரூபாவை வழங்க காப்புறுதி நிறுவனம் இணக்கம்

### சபையில் நேற்று நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை கடலில் தீ அனர்த்தத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி நிறுவனமானது இலங்கைக்கு 8 இலட்சத்து 50 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனினும், இந்த விடயம் தொடர்பாக சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

தீ அனர்த்தத்துக்குள்ளான 06

## முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம்; அரசாங்கம் விரைவில் நடவடிக்கை

### முன்பள்ளிகளை கண்காணிக்கவும் திட்டம்



முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிறுபராய மேம்பாடு தொடர்பாக முறையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென, மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த 06

## பாதாளக் குழுக்களுக்கு எதிராக விசேட நடவடிக்கை எடுக்க முடிவு

### ஆறு மாதங்களுக்குள் முற்றாக ஒழிக்க திட்டம் – தென்னகோன்



பாதாள உலகக் குழுக்களை முற்றாக ஒழிப்பதற்கு ஆறு மாதகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக, மேல் மாகாணத்துக்கான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் கொள்ளைகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள் பல மடங்காக அதிகரித்துள்ளதையடுத்து பொலிஸார் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து திட்டமிட்ட குற்றவாளிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அடுத்த ஆறு மாதங்களில் பாதாள உலகக் கும்பல்களை முற்றாக ஒழிக்கும் நோக்கத்துடனையே 06

## இலங்கையில் விரைவில் Online மூலம் மீன் விற்பனை

### முதற்கட்டமாக கொழும்பில் ஆரம்பமாகிறது



இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன் உள்ளிட்ட கடலுணவு உற்பத்திகளை இணையத்தளத்தினூடாக வீடுகளிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியுமென, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்தார்.

கடற்றொழில் கூட்டுத்தாபனம், தற்போதைய சந்தை முறைக்கேற்றவாறு நவீனமயமாக்கல் செய்து 'உணவு மற்றும் பொருட்கள் விநியோக சேவைகள்' மூலம் நுகர்வோருக்கு வேண்டிய கடலுணவுகளை தமது வீடுகளுக்கு கொண்டுவந்து 06

தீவிர விசாரணை நடத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்;

## ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தோர் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளனரா?

### IGPயிடம் அ.இ. ஜம்இய்யத்துல் உலமா அவசர வேண்டுகோள்




கடந்த 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை நடத்திய ஐ.எஸ். அமைப்பினர் மீண்டும் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளனரா? என்பது தொடர்பாக துரித விசாரணைகளை மேற்கொண்டு, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ் மாஅதிபர் சி.டீ. விக்கிரமரத்னவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா நேற்று முன்தினம் (24) கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. 06

## வெலிக்கடை சிறையில் பெண் உயிரிழந்த சம்பவம்

### தொடர்புபட்டோரை கைது செய்ய நீதிமன்று உத்தரவு



வெலிக்கடை சிறைச்சாலையில் 'ராஜகுமாரி' என்ற பெண் உயிரிழந்த சம்பவத்தில் தொடர்புடைய அனைவரையும் உடனடியாக கைது செய்யுமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரேத பரிசோதனையை அடிப்படையாக வைத்தே, நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

மழுங்கிய ஆயுதம் அல்லது அது போன்ற ஒன்றால் இவர் தாக்கப்பட்டதால், தசைகளில் ஏற்பட்ட பாதிப்புகளால் இரத்தக் கசிவு ஏற்பட்டதாக நீதிமன்றம் தெரிவித்தது. 06

மட்டக்களப்பில் யானை தாக்கியதில்

## வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி பலி!

### யானையை கட்டுப்படுத்த முயற்சிக்கையில் சம்பவம்



மட்டக்களப்பு, வேத்துச்சேனை கிராமத்தில் காட்டு யானைகள் புகுந்து அட்டகாசம் செய்ததுடன், அந்த யானைகளை கட்டுப்படுத்துவதற்கு களத்தில் இறங்கி முயற்சித்த வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களில் ஒருவர் யானை தாக்கியதில் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரையில் அமைந்துள்ள போரதீவுப்பற்று 06

நீதிமன்ற செயற்பாடுகளை அவமதித்த கூற்று;

## சரத் வீரசேக்கர MPக்கு எதிராக வடக்கில் பாரிய ஆர்ப்பாட்டம்

### சட்டத்தரணிகள் வீதியில் இறங்கி போராட்டம்



**ஓமந்தை விசேட, யாழ். விசேட, சாவகச்சேரி விசேட, பருத்தித்துறை விசேட, மன்னார் குறூப், பரந்தன் குறூப், வவுனியா விசேட நிருபர்கள்**

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் அண்மைய பாராளுமன்ற உரையை கண்டித்து வடமாகாணத்தில் அடையாள கண்டன ஆர்ப்பாட்டத்தை வடமாகாண சட்டத்தரணிகள் நேற்று (25) முன்னெடுத்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர 22.08.2023 அன்று முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தொடர்பாக அவதூறு பரப்பும் வகையிலும் 06



## அதிக புகையுடன் பயணிக்கும் வாகனங்கள் குறித்து அறிவிக்கலாம்

போக்குவரத்து ஆணைக்குழு ஆணையாளர் தெரிவிப்பு 03

பண்டாரவளை உல்லாச ஹோட்டலில்

## 03 பிள்ளைகளின் தாய் கழுத்தறுத்து கொலை

### 02 ஆவது கணவன் தலைமறைவு பொதுமக்களின் உதவியை நாடுகிறது பொலிஸ்

**ஊவா சுழற்சி நிருபர்**





பண்டாரவளை நகரிலுள்ள உல்லாசக் ஹோட்டலொன்றின் அறையில் கூரிய ஆயுதத்தால் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அட்டம்பட்டி, கந்தகொல்ல பிரதேசத்தை சேர்ந்த சஞ்சீவனி துசாரிகா த சில்வா (வயது 40) என்பவரே இவரது 06

## இலங்கையில் தீவிரமாக தேடப்படும் 03 நபர்கள் பெங்களூரில் கைது!

### புலிகள் அமைப்புடன் தொடர்பா என தீவிர விசாரணை

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**



தேடப்படும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 3 இளைஞர்கள் பெங்களூரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புள்ளதா? எனும் கோணத்தில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

பெங்களூர் நகரில் இலங்கையைச் சேர்ந்த 3 இளைஞர்கள் 06

## உணவகம் ஒன்றில் புழுக்கள் அடங்கிய உணவு விற்பனை

### சுகாதார வைத்திய அதிகாரி முறைப்பாடு



கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரதேசத்திலுள்ள பிரதான உணவகமொன்றில் புழுக்கள் அடங்கிய உணவுகள் விற்பனை செய்யப்பட்டதாக வெள்ளவத்தை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முறைப்பாடொன்று கிடைத்துள்ளது.

உணவகத்திலிருந்து சட்டத்தரணி ஒருவர் உணவை வாங்கிக்கொண்டு சென்று வீட்டில் வைத்து 06

பச்சை குத்தியோர்

## இரத்ததானத்தை செய்ய முடியாது




உடம்பில் பச்சை குத்தியவர்களிடமிருந்து இனி இரத்த தானம் செய்யப்பட மாட்டாதென, தேசிய இரத்த மாற்றுச் சேவையின் பணிப்பாளர், வைத்தியர் லக்ஸ்மன் எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இந்த நாட்டிலுள்ள பெரும்பாலான பச்சை குத்தும் மையங்கள் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை பின்பற்றாததால், ஆபத்து மேலும் தீவிரமடைவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 06

## நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைகிறது

### மின் உற்பத்தி செயற்பாடு சிக்கலில்!



நீர்தேக்கப்பகுதிகளில் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தின் ஆரம்பத்தில் போதியளவான மழை வீழ்ச்சி பதிவாகாதுவிடின், மின்சார உற்பத்தி பெரும் நெருக்கடிக்குள்ளாகுமென்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

தற்போது நிலவிவரும் வரட்சி காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் 06

# சர்வதேச செய்திகள்

## சரணடைந்த டொனல்ட் டிரம்ப் கைதானதன் பின் விடுதலை

### கைதிக்கான புகைப்படமும் வெளியானது

தேர்தல் மோசடி தொடர்பாகத் தன்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப் கடந்த வியாழக்கிழமை (24) அட்லாண்டாவின் ‘ஃபுல்டன் கவுன்டி’ சிறைச்சாலையில் சரணடைந்தார்.

பின்னர் 200,000 அமெரிக்க டொலர் பிணைத் தொகையில் அவர் விடுவிக்கப்பட்டார்.

கிட்டத்தட்ட 20 நிமிடங்களே டிரம்ப் சிறையில் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. ஃபுல்டன் கவுன்டி சிறைச்சாலை ஆவணங்களின்படி, அவரது பதிவெண் ‘பீ 01135809’ ஆக இருந்தது.

தகவலறிந்து சிறைச்சாலைக்கு வெளியே டிரம்ப் ஆதரவாளர்கள் பலர் குவிந்தனர்.

சிறையில் அவரது அடையாளங்களைக் குறித்துக்கொண்ட பொலிஸார், ஆவணப் பதிவுக்காக அவரைப் புகைப்படமும் எடுத்தனர். அப்படம் பின்னர் வெளியிடப்பட்டது.

கடந்த 2020ஆம் ஆண்டு நடந்த ஜோர்ஜியா மாநிலத் தேர்தலின் முடிவுகளை மாற்ற முயன்றதாக 77 வயது டிரம்ப் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிணையில் வெளிவந்த பின்னர், தன் மீதான



வழக்கு, ‘நீதியைக் கேலிக்கூத்தாக்கி’ இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பொலிஸார் வெளியிட்ட தன் படத்தையும் தனது இணையத்தள முகவரியையும் தனது ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துகொண்ட டிரம்ப், அதன்கீழ், “தேர்தல் குறுக்கீடு. இனி சரணடைய மாட்டேன்,” என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2021 ஜனவரிக்குப் பின்னர் ட்விட்டரில் அவர் பதிவிட்டது இதுவே முதன்முறை.

அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான குடியரசுக் கட்சியின் வேட்பாளர் தேர்வில் தானே முன்னிலையில் இருப்பதாகக் கூறிய அவர், தமக்கெதிரான வழக்குகள் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்றும் குறிப்பிட்டார்.

ஜோர்ஜியா மாநிலத் தேர்தல் முடிவுகளை மாற்ற முயன்றதாக டிரம்ப் உள்ளிட்ட 19 பேர் மீது கடந்த வாரம் குற்றம் சுமத்தப்பட்டது.

வாக்கு எண்ணிக்கையின்போது ‘மேலும் 11,780 வாக்குகளைக் கண்டறியும்படி’ ஜோர்ஜியத் தேர்தல் உயரதிகாரிக்கு தொலைபேசி வழியாக டிரம்ப் நெருக்குதல் அளித்ததாகக் கூறப்படுகிறது.

மொத்தம் 13 குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் டிரம்ப், அவை அனைத்தையும் மறுத்து வருகிறார்.

## உக்ரைனிய விமானிகளுக்கு அமெ. போர் விமான பயிற்சி



அடுத்த மாதம் தொடக்கம் உக்ரைனிய விமானிகளுக்கு எப்–16 போர் விமானங்களை செலுத்த பயிற்சி அளிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து 18 மாதங்களை எட்டும் நிலையில் அந்நாட்டு வான் பாதுகாப்பை பலப்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரும் செப்டெம்பர் மாதம் அமெரிக்காவுக்கு அழைக்கப்படும் விமானிகள் மேம்பட்ட விமானத்தை எப்படி செலுத்துவது என்று பயிற்சி அளிப்பதற்கு முன்னர் ஆங்கில மொழி கற்பிக்கப்படவுள்ளது.

டெக்சாஸ் மற்றும் அரிசோனாவில் இடம்பெறவுள்ள இந்த பயிற்சியில் பல விமானிகள் மற்றும் விமானத்தை பராமரிக்கும் டஜன் கணக்கானவர்கள் பங்கேற்பார்கள் என்று பெண்டகன் பேச்சாளர் பெட் ரைடர் கடந்த வியாழக்கிழமை (24) தெரிவித்தார். இந்த பயிற்சித் திட்டம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தொலைபேசியில் பேசியதாக வெள்ளை மாளிகை தெரிவித்தது.

“ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக உக்ரைனின் பாதுகாப்புக்கு ஆதரவளிப்பதற்கும், அதன் நடவடிக்கைகளுக்கு ரஷ்யாவை பொறுப்பேற்க வைப்பதற்கும் அமெரிக்காவின் உறுதிப்பாட்டை ஜனாதிபதி பைடன் மீண்டும் வலியுறுத்தினார்” என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு எப்–16 போர் விமானங்களை வழங்குவது மற்றும் விமானிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு ஐரோப்பிய கூட்டணிகளான டென்மார்க் மற்றும் நெதர்லாந்தின் திட்டத்தை விரிவுபடுத்துவதாக அமெரிக்காவின் இந்த அறிவிப்பு உள்ளது. நோர்வேயும் இந்த போர் விமானங்களை வழங்க உறுதி அளித்திருப்பதோடு பயிற்சி வழங்க கிரேக்கம் முன்வந்துள்ளது.

## அண்டார்டிக்காவில் பனி உறுகுவதால் ஆயிரக்கணக்கான பென்குயின்கள் பலி

அண்டார்டிகாவில் 10,000 வரையான எம்பரர் பென்குயின் குஞ்சுகள் இறந்திருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பெருங்கடலில் நீந்துவதற்கு தேவையான நீர்க்காப்பு அம்சம் பென்குயின் குஞ்சுகளிடம் வளர்வதற்கு முன்னரே பனி உருகியதால் அவை மூழ்கி பலியாகியுள்ளன.

இந்த பறவைகள் பெரும்பாலும் நீரில் மூழ்கி அல்லது உறைந்து இறந்துள்ளன. இந்த நிகழ்வு, 2022 இன் பிற்பகுதியில், கண்டத்தின் மேற்கில் பெல்லிங்ஷவுசென் கடலுக்கு முன்னால் ஒரு பகுதியில் நிகழ்ந்துள்ளது.

செய்மதி ஊடாக இது கண்காணிக்கப்பட்டுள்ளது.

இது எதிர்காலத்தில் வரவிருப்பதற்கான முன்னோடியாக உள்ளது என்று பிரிட்டிஷ் அண்டார்டிக் கணக்கெடுப்பைச் சேர்ந்த டொக்டர் பீட்டர் பிரெட்வெல் எச்சரித்துள்ளார். பூமி தொடர்ந்து வெப்பமடைவதால் இந்தக் கண்டத்தின் கடல் பனி உருகிவரும் நிலையில் இந்த நூற்றாண்டு முடிவில் எம்பரர் பென்குயின் இருப்பிடங்களில் 90 வீதமானவை அழிந்துவிடும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.

“எம்பரர் பென்குயின்களின் இனப்பெருக்கம் கடல் பனியிலேயே தங்கியுள்ளது. அதன் ஸ்திரமான தளத்திலேயே தனது குஞ்சுகளை வளர்க்கிறது. ஆனால் இந்தப் பனி இல்லாதபோது அல்லது வேகமாக உருகும்போது இந்தப் பறவைகள் பிரச்சினைக்கு முகம்கொடுக்கும்” என்று பிரெட்வெல் குறிப்பிட்டார்.

“வெப்பமாதலுக்குக் காரணமான கரியமில வாயு வெளியேற்றத்தை எம்மால் குறைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் நாம் அதனை செய்யாவிட்டால் இந்த அழகான பறவைகள் அழிந்துவிடும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அந்த பறவை இனம் முழுவதும் அழிவடையும் அச்சம்



பென்குயின் குஞ்சுகளின் இறப்பு குறித்து பிரெட்வெல் மற்றும் அவரது சகாக்கல் கொம்மியுனிகேசன் ஏர்த் அன்ட் என்வாயர்மன்ட் என்ற சஞ்சிகையில் எழுதியுள்ளார்.

இதன்போது பெல்லிங்ஷவுசென் கடல் பகுதியில் உள்ள ஐந்து பென்குயின் இருப்பிடங்களை விஞ்ஞானிகள் காண்காணித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சென்டினல்–2 செய்மதிகளை பயன்படுத்தி, அவர்கள் வெள்ளைக் கடல் பனியில் விட்டுச் சென்ற மலம் அல்லது குவானோவிலிருந்து பென்குயின் செயல்பாட்டை அவதானிக்க முடிந்தது. இந்த பழுப்பு நிற கறை விண்வெளியில் இருந்தும் கூட தெரியும்.

குளிர்காலம் நெருங்கும்போது மார்ச் மாதம் அளவில் வயது வந்த பறவைகள் கடல் பனியை அடைந்து முட்டைகளை இட்டு அடுத்த சில மாதங்களில் அந்த குஞ்சுகளை வளர்க்கும். இப்படி வளர்ந்த பறவைகள் டிசம்பர் அல்லது ஜனவரி காலப்பகுதியில் பெருங்கடலை நோக்கிச் செல்லும். எனினும் கடந்த ஆண்டு கடைசியில் அவ்வாறான நகர்வுகள் இடம்பெறாததை ஆய்வாளர்கள் அவதானித்துள்ளனர்.

இதன் விளைவாக நான்கு பென்குயின் இருப்பிடங்களில் மொத்த இனப்பெருக்க செயற்பாடும் தோல்வியை சந்தித்திருப்பதோடு ரோத்ஸ்சைல்ட் தீவில் உள்ள வடக்குப் பகுதியில் மட்டுமே ஓரளவு வெற்றி பெற்றுள்ளது.

அண்டார்டிக்காவின் கோடைகால கடல் பனி கடந்த 2016 தொடக்கம் வேகமாக குறைந்து வருவதோடு அங்கு உறைந்த நீர்ப் பகுதி சாதனை அளவுக்கு வீழ்ச்சி கண்டுள்ளது.

## ட்விட்டர் போட்டி த்ரீட்ஸ் இணையத்தில் அறிமுகம்

மெட்டா நிறுவனத்தின் ட்விட்டர் செயலிக்குப் போட்டியாகக் களமிறங்கிய த்ரீட்ஸுக்கு பயனீட்டாளர்களிடமிருந்து எதிர்பார்த்த வரவேற்பு கிடைக்கவில்லை. இதையடுத்து அந்தச் செயலி இணையத்தில் அறிமுகமாகியுள்ளது.

நிபுணர்களும் சமூக ஊடகவியலாளர்களும் த்ரீட்ஸ் பயன்படுத்துவதை ஊக்குவிக்க இப்புதிய வழிமுறை உதவும் என்று நம்பப்படுகிறது.

Threads.net ஐ இனி யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். அதன் பயன்பாடு எப்படி உள்ளது என்பதைத் தங்களிடம் தெரிவிக்குமாறு இன்ஸ்டாகிராமின் தலைவரும் த்ரீட்ஸை கையாளுபவருமான அடம் மோஸேரி கேட்டுக்கொண்டுள்ளார்.




இதுநாள் வரை த்ரீட்ஸ் ஐபோன்களிலும் அன்ட்ரொயிட் கைபேசிகளிலும் செயலி வடிவில் மட்டுமே பயன்படுத்த முடிந்தது.

தற்போது அது இணையத்துக்கு மாறியுள்ளது. வரும் நாட்களில் அதன் அம்சங்கள் மெருகேற்றப்படும் என்றார் அவர்.

## உக்ரைனின் 42 'ட்ரோன்களை' முழுமையாக அழித்தது ரஷ்யா

கிரைமியா தீபகற்பத்தின் மீது பறந்த உக்ரைனால் ஏவப்பட்ட 42 ஆளில்லா ட்ரோன் விமானங்களை அழித்துவிட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், கலுகாப் பகுதியைத் தாக்குவதற்காக உக்ரைனால் ஏவப்பட்ட ஏவுகணையையும் ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்பு அழித்துவிட்டதாக அந்நாட்டு அமைச்சு கூறியது.

அதில் ஒன்பது ஆளில்லா விமானங்களை ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்பு அழித்ததாகவும் மின்னணுக் கருவிகள் மூலம் 33 ஆளில்லா விமானங்களை அதனுடைய இலக்கை அடையவிடாமல் செயலிழக்கச் செய்ததாகவும் அமைச்சு தெரிவித்தது.

உக்ரைன் வசமிருந்த கிரைமியாவை 2014ஆம் ஆண்டில் ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

உக்ரைனால் நடத்தப்பட்டது என ரஷ்யாவால் குற்றஞ்சாட்டப்படும் இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து உடனடியாகத் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.



ரஷ்ய விமான நிலையங்களில் மட்டும் சில மணி நேரம் விமானச் சேவை நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.




## பயங்கரவாதம் மூலம் பேச்சை எதிர்பார்ப்பது வீணான முயற்சி

### பாகிஸ்தான் இராணுவத் தளபதி

பயங்கரவாத நடவடிக்கைகளின் ஊடாக மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியுமென எதிர்பார்ப்பது வீணான முயற்சி என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அசிம் முனீர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசுக்கும் பாகிஸ்தான் தலிபான்களுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்ததைத் தொடர்ந்து இடம்பெறும் பயங்கரவாத செயற்பாடுகள் குறித்து மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள இராணுவத தளபதி, பாகிஸ்தான் அரசின் ஆணைக்கு அடிபணிய வேண்டும் என்றும் எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தான் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையிலான யுத்த நிறுத்தம் கடந்த வருட இறுதியில் முறிவடைந்தது. இந்நிலையில் இவ்வருடத்தின் முதல் ஏழு மாதங்களிலும் 18 தற்கொலைத் தாக்குதல்கள் நடந்துள்ளன. அதனால் சுமார் 200 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு 450க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று பாதுகாப்பு துறையினரை மேற்கோள்காட்டி டோன் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் எல்லைப்புற மாவட்டமான பஜௌரில் தேர்தல் பேரணியை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 23 சிறுவர்கள் உட்பட 63 பேர் கொல்லப்பட்டதோடு 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற சில தினங்களுக்குள் வடக்கு வசரிஸ்தானில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் கட்டட நிர்மாணத் தொழிலாளர்கள் 11 பேர் கொல்லப்பட்டதோடு இருவர் காயமடைந்தாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 26 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

**தொழுகை நேரம்**
சுபஹ் - 04.46
லுஹர் - 12.14
அஸர் - 03.25
மஃரிப் - 06.22
இஷா - 07.34

**இன்றைய சுபதினம்**
சோபகிருது வருடம் ஆவணி 10
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கு ஆரம்பம்

## விசாரணைக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாமென அமைச்சர் விஜேயதாச சபையில் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கை கடற்பரப்பில் அனர்த்தத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்கு, சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதால், வழக்கு விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான சுற்றாடல் துறைசார் மேற்பார்வை குழு சமர்ப்பித்த அறிக்கையில் சட்ட மாஅதிபரின் செயற்பாடு மற்றும் அதிகாரங்களை கேள்விக்குள்ளாக்கும் ஒரு சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்கு உரியதென்பதையும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் சபையில் மேலும் தெரிவித்த போது,

"பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையிலான சுற்றாடல் தொடர்பான பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி நாட்டின் கடற்பரப்பில் தீ அனர்த்தத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ்பேர்ள் கப்பல் மற்றும் நியூ டயமன் கப்பல் தொடர்பாக பாராளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தது.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையானது சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களை கேள்விக்குள்ளாக்கும் வகையில் அமைந்துள்ளதாக, சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, சுற்றாடல் தொடர்பான பாராளுமன்ற 06

பாராளுமன்ற ஒழுக்கநெறிகளை மீறிய பிரதிநிதி;

# அலி சப்ரி ரஹீம் MPக்கு எதிராக விசாரணை நடத்துவது அவசியம்

## சபையில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராக, நிலையியல் கட்டளையின் 118ஆவது பிரிவுக்கமைய பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவினூடாக முழுமையான விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டுமென, சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்கநெறிகளை மீறியுள்ளதுடன், மக்கள் பிரதிநிதியென்ற அடிப்படையில் மக்களின் நம்பிக்கையை சிதைத்துள்ளாரென்றும் அவரது செயற்பாட்டால் உயரிய பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக கவனம் செலுத்தி பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை குழுவினூடாக விசாரணை மேற்கொள்ளுமாறும் பிரதி சபாநாயகரிடம் அவர் கேட்டுக் கொண்டார்.



பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை மீறல் பிரச்சினையொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கடந்த மே மாதம் 23ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் சட்டவிரோதமான முறையில் 3 கிலோகிராமுக்கும் அதிகமான தங்கம் மற்றும் பெருமளவிலான ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை நாட்டுக்கு கொண்டு வர முயற்சித்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து, அவருக்கு 75 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டார். அவர் தமது இராஜதந்திர கடவுச்சீட்டு, விமான நிலையத்தின் பிரபுக்கள் வெளியேறும் முனையம் ஆகியவற்றை முறையற்ற வகையில் பயன்படுத்தியுள்ளார். கைப்பற்றப்பட்ட 7 கோடி ரூபா 06

# இந்திய அமைச்சர் ஸ்ரீநிதின் கட்கரியை உயர்ஸ்தானிகர் மிலிந்த சந்தித்து விடை பெற்றார்



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி போக்குவரத்து அமைச்சர் ஸ்ரீநிதின் கட்கரியை மரியாதையின் நிமித்தம் புதுடில்லியில் சந்தித்து விடை பெற்றுக்கொண்டுள்ளார்.

இதன்போது, புதுடில்லியில் தான் தங்கியிருந்த காலத்தில் வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கு அமைச்சர் ஸ்ரீநிதின் கட்கரிக்கு உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நன்றி தெரிவித்துள்ளதுடன், அமைச்சருக்கு நினைவுப் பரிசொன்றையும் மிலிந்த மொரகொட வழங்கியுள்ளார்.

அத்துடன், வசதியான சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் அமைச்சர் ஸ்ரீநிதின் கட்கரிக்கு உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட அழைப்பு விடுத்துள்ளார்.

# சிறுபான்மை சமூகங்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புங்கள்

## இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் கருத்து

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்த இராணுவத்தினர், சிறுபான்மை சமூகங்களுடன் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் தொடர்பாக அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.



இலங்கை இராணுவத்தின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.பி.அமுனுகமவை யாழ்ப்பாணத்தில் சந்தித்த போது, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இதனை வலியுறுத்தியுள்ளார்.

இராணுவத்தை நவீனமயமாக்குவதற்கான இலங்கையின் முயற்சிகள் உட்பட பாதுகாப்பு ஒத்துழைப்புகள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது.

வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்ட தூதுவர் ஜூலி சங், யாழ்ப்பாணத்திலுள்ள சிவில் சமூகத் தலைவர்கள் உட்பட பல தரப்பட்ட சமூகங்களை சந்தித்து அவர்களின் கருத்துகளை கேட்டறிந்துகொண்டார். இந்நிலையில், ஜனநாயக இலங்கைக்காக ஒன்றிணைந்து செயற்படுவதற்கு ஆற்றல்மிக்க குரல்களும் பங்காளிகளும் அவசியமெனவும், அமெரிக்க தூதுவர் மேலும் தெரிவித்தார்.

# உகண்டா எம்.பிக்கள் இருவர் சபாநாயகருடன் சந்திப்பு



உகண்டா பாராளுமன்ற உறுப்பினர்களான எலெய்ஜா ஒகுபு மற்றும் அப்து கடுன்டு ஆகியோர் மரியாதையின் நிமித்தம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (24) சந்தித்து கலந்துரையாடினர்.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உகண்டாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் சபாநாயகர்கள் மற்றும் தலைமை தாங்கும் அதிகாரிகளின் 27ஆவது மாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் சபாநாயகருக்கு அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கைக்கும் உகண்டாவுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு பரஸ்பர கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறை அமைச்சை பெற சிலர் விசர் நாய்களை போன்று செயல்

## ஜனாதிபதிக்கும் எனக்குமிடையில் பிணக்குகளை ஏற்படுத்த சிலர் முயற்சி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதிக்கும் தமக்கும் இடையில் பிணக்குகளை தோற்றுவிக்க சிலர் முயற்சி செய்து வருவதாக, விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சை பெற்றுக் கொள்வதற்காக சிலர், விசர் நாய்களை போன்று செயற்படுவதாகவும் அவர்கள் தமக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் உரையாற்றிய போது,

"கிரிக்கெட் நிறுவனத்தில் மாத்திரமல்ல, அனைத்து விளையாட்டுத்துறைகளிலும் ஊழல் மோசடிகள் அதிகரித்து காணப்படுகின்றன. குறிப்பாக, கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெறும் மோசடிகளை இல்லாதொழிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்காக செயற்படும் போது, பல சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. கிரிக்கெட் நிறுவனம் உட்பட விளையாட்டுத்துறையில் இடம்பெற்று வரும் 06

# அதிக புகையுடன் பயணிக்கும் வாகனங்கள் குறித்து அறிவிக்கலாம்

## போக்குவரத்துக் ஆணைக்குழு ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு மாவட்டத்தில் 70 சதவீதம் வளி மாசடைவதற்கு வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையே காரணமென, மோட்டார் வாகன போக்குவரத்து ஆணைக்குழுவின் ஆணையாளர் நிசாந்த அனுருத்த தெரிவித்தார்.



கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

வாகனத்தை செலுத்தும் போது அதிலிருந்து வெளியேற்றப்படும் புகையை அளவிடுவதற்கு திட்டமொன்று தயாரிக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

மேலும், அதிகமான புகை வெளியேற்றத்துடன் வாகனங்கள் பயணிக்கும் பட்சத்தில் அதனை புகைப்படம் எடுத்து வட்ஸ்அப் செயலிக்கு அனுப்பி வைக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

புகைப்படத்துக்கு அமைவாக வாகன உரிமையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் அமரர் சிறிசேன குரே

# வறுமை ஒழிப்புத் திட்டத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்

## சபையில் பிரதமர் தினேஷ் அனுதாபம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வறுமை ஒழிப்பு வேலைத்திட்டமானது தற்போது பெரும் சவாலாக காணப்படுகின்ற போதிலும், நாட்டில் வறுமை ஒழிப்புக்காக பெரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டராக முன்னாள் அமைச்சர் அமரர் சிறிசேன குரே காணப்படுவதாக, பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான உடவத்தே நந்த தேரர், எஸ்.ஏ.ஆர்.மத்துமபண்டார, சிறிசேன குரே ஆகியோர் மீதான அனுதாபப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே, பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் சபையில் தொடர்ந்து உரையாற்றிய போது, "முன்னாள் அமைச்சர் சிறிசேன குரே வறுமை ஒழிப்புக்கான தலைமைத்துவத்தை வழங்கியவராவார். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச எந்தவொரு பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்த போதும், அவற்றை மிக வெற்றிகரமாக நிறைவேற்றிய ஒருவராக சிறிசேன குரேயை நாம் குறிப்பிட முடியும். அந்த வகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் பலமான சக்தியாகவும் அவர் திகழ்ந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் வீடமைப்புத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் கொண்டுசெல்ல உழைத்தவர் அவர். கொழும்பு மக்களின் வறுமை ஒழிப்பை உலகளவில் கொண்டு சென்று ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டவர் அவர். அந்த வகையில், முன்னாள் 06

69ஆவது தேசிய திரைப்பட விருது

# சிறந்த தமிழ்த் திரைப்படமாக 'கடைசி விவசாயி' அறிவிப்பு




69ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா, இந்தியாவின் புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இந்நிலையில், 'புஷ்பா' திரைப்படத்தில் நடித்த அல்லு அர்ஜுன் சிறந்த நடிகராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், தமிழில் வெளியான 'கடைசி விவசாயி' திரைப்படம் சிறந்த தமிழ் திரைப்படமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய விருதுகள் பெறவுள்ள படங்களின் அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. இதில் 'கருவறை' ஆவணப் படத்துக்காக இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவாவுக்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏக்காகவுன் திரைப்படத்துக்காக பின்னணி பாடகர் உன்னி கிருஷ்ணனுக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் கடந்த 2021ஆம் ஆண்டு வெளிவந்த தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் இந்தியாவில் வெளிவந்த திரைப்படங்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்திய அரசாங்கம் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் சிறந்த படங்கள், நடிகர், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தேசிய திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. 69ஆவது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா புதுடில்லியில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் 2021ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள படங்களின் முழு விபரம் வருமாறு:

சிறந்த திரைப்படம் : ராக்கெட்ரி தி நம்பி எஃபெக்ட் (ஹிந்தி)

சிறந்த தமிழ் திரைப்படம்: கடைசி விவசாயி 06

# 42 இலங்கை பெண்கள் டுபாயில் சித்திரவதை!

## இலங்கை அழைத்துவர தூதரகம் ஏற்பாடு



டுபாயில் வீட்டுப் பணிப் பெண்களாக பணியாற்றி வந்த இலங்கை பணிப்பெண்கள் 42 பேர் பல்வேறு சித்திரவதைகளுக்குள்ளான நிலையில், அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, டுபாயிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

பத்து பணிப்பெண்களைக் கொண்ட குழு, இலங்கை விமான சேவைக்கு சொந்தமான விமானம் மூலம் ஏற்கெனவே நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும், டுபாயிலுள்ள இலங்கைத் தூதரகம் மேலும் தெரிவித்தது.

# மட்டக்குளியில் இரண்டு குழுக்களிடையே மோதல்

## ஒருவர் பலி; இன்னொருவருக்கு காயம்




கொழும்பு, மட்டக்குளி பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாக, மட்டக்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்குளி, ஜோர்ஜ் பீரிஸ் மாவத்தையில் நேற்று முன்தினம் (24) இரவு இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இந்த மோதல் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், வெட்டுக்காயங்களுடன் வீதியில் கிடந்த நபரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அவர் பின்னர் உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காயமடைந்த 28 வயதுடைய இளைஞர் சிகிச்சைக்காக தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்ட்ரேலிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 09

### குறள் தரும் சிந்தனை



இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்

துன்பத்திலேயே பெருந்துன்பம் பகையுணர்வுதான். அந்த உணர்வை ஒருவன் அகற்றி விடுவானேயானால், அது இன்பத்திலேயே பெரும் இன்பமாகும்.

# இக்கரைக்கு அக்கரை பச்சை!

இலங்கையில் தற்போது பெருமளவான மக்களிடம் வெளிநாட்டு மோகம் பரவியிருப்பதைக் காண முடிகின்றது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்புகளுக்காகச் சென்று வருவதென்பது இலங்கையர்களிடம் வழமையாகக் காணக்கூடியதொரு வழக்கம்தான். ஆனால் தற்போது உருவெடுத்திருப்பது அத்தகைய தொழில்வாய்ப்பு எண்ணமல்ல.

மேற்குநாடொன்றுக்குச் சென்று அங்கேயே நிரந்தரமாகக் குடியேறி வாழ்வதற்கு ஏராளமானோர் ஆசைப்படுவது நன்றாகவே தெரிகின்றது. மேற்குநாட்டுப் படையெடுப்பென்பது இளையோர் தொடக்கம் முதியோர் வரை பலரிடமும் தற்போது குடிகொண்டிருக்கின்றது. அதற்கான முயற்சிகளிலும் பலர் ஈடுபடுகின்றனர். கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவிட்டு அதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவாறு மேற்கு நாடொன்றுக்குச் சென்று குடியேறி விட்டால், அங்கு வசதிவாய்ப்புகளுடன் வாழலாமென்று அவர்கள் நினைக்கின்றனர். தாங்கள் வாழ்வதற்கான அத்தனை உதவிகளையும் மேற்கு நாடுகள் வாரிவழங்கிக் கொண்டேயிருக்குமென்று பலர் மனக்கோட்டை கட்டுகின்றார்கள். அதாவது அந்நாட்டின் அரசாங்க உதவியுடன் தாங்கள் இலகுவாக, வசதியாக வாழலாமென்பது பலரது கனவாக உள்ளது.

வசதிவாய்ப்புகளுடன் வாழ நினைப்பது தவறென்று கூறிவிட முடியாது. ஆனாலும் மேற்குநாடுகளில் வாழ்கின்ற எமது மக்கள் பலர் கூறுகின்ற தகவல்களைப் பார்க்கின்ற போது, அனைத்துமே 'தூரத்துப் பச்சை' என்பதுதான் உண்மை போலத் தெரிகின்றது. இங்குள்ளவர்கள் அங்கு சென்று வாழ்வதற்கு ஆசைப்படுகின்றார்கள். அதேசமயம் அங்கு சென்றவர்களோ 'தாய்நாடுதான் சொர்க்கம்' என்று ஏங்குகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, இலங்கை மக்களில் பலரிடம் வெளிநாட்டு மோகம் என்பது முற்றாகவே இல்லையென்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. 'எமது நாடு போல வாய்த்து விடாது' என்று அவர்கள் வெளிப்படையாகவே சொல்வதை நாம் காதால் கேட்டிருக்கின்றோம். அதுவும் கிராமங்களில் பிறந்தவர்களிடம் தாயகப்பற்று மிகவும் அதிகமென்றே சொல்ல முடியும்.

கிராமத்தில் பிறந்தவர்களுக்கு மாத்திரமே அதன் மண்வாசனை புரியும். இயற்கையுடன் கலந்த வாழ்க்கை; வஞ்சகமில்லாத மக்கள்; போட்டித்தன்மையற்ற வாழ்க்கை என்றெல்லாம் கிராமத்து வாழ்க்கையின் மகிழ்ச்சிகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் கிராமத்து மக்கள் கூட தற்போது படிப்படியாக பிறரால் வெளிநாட்டு ஆசையூட்டப்பட்டு வருகின்றார்கள்.

அதன் காரணமாக சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்லவும் தலைப்படுகின்றார்கள். அவ்வாறு செல்லும் போது நடுக்கடலில் கைதாகி அவலங்களுக்கு உள்ளாகும் பரிதாப நிலைமையும் ஏற்படுகின்றது. இலங்கையர்கள் பலர் வெளிநாடுகளிலுள்ள சிறைகளில் வாடுவதாகவும் செய்திகள் வருகின்றன.

பலரிடமும் கடன்பட்டு பல இலட்சங்களை வாரியிறைத்து இறுதியில் அனைத்தையுமே இழந்து விடுகின்றார்கள். இலங்கையில் அவர்களது குடும்பத்தினர் படுகின்ற அவலங்களும் அதிகம். வெளிநாட்டுக் கனவு ஈடேறாது போனது ஒருபுறமிருக்க, கடன்காரர்களின் தொல்லையினால் குடும்பத்தினர் அனுபவிக்கின்ற துன்பங்கள் ஏராளம்.

'சட்டவிரோதமாக வெளிநாடு செல்லும் முயற்சிக்காகச் செலவிட்ட பணத்தைக் கொண்டு எமது நாட்டிலேயே சிறுவியாபார முயற்சியையோ அல்லது சுயதொழில் எதனையுமோ தொடங்கியிருக்கலாம்' என்பது அவர்களுக்கு இறுதியில் வருகின்ற ஞானோதயம் ஆகும். ஆனாலும் இழந்து போனது காலம் கடந்த பின்னர் வருவதில்லை.

சட்டவிரோதமாக வெளிநாடு செல்வதற்கு முயற்சித்து இன்று நடுத்தெருவில் நிற்கின்ற குடும்பங்கள் ஏராளம். வடக்கு, கிழக்குப் பிரதேசங்களிலும் இவ்வாறு பலர் பணத்தை இழந்திருக்கின்றார்கள். மேற்குநாட்டு மண்ணில் அல்லது அவுஸ்திரேலியாவில் தரையிறக்குவதாக வாக்குறுதியளித்து அப்பாவி மக்களை அழைத்துச் செல்கின்ற முகவர்களின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதுதான் என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

சாதாரண மக்கள் இவ்வாறு வெளிநாட்டு மோகம் கொண்டுள்ளது ஒருபுறமிருக்க மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்ற தொழில்வாண்மை நிபுணர்கள் பலரும் கூட மேற்குநாடுகளுக்குச் சென்று வாழ்வதற்கு தற்போது அதிகம் விரும்புவதாகத் தெரிகின்றது. இவ்வாறானவர்கள் அதிகமானோர் ஏற்கனவே வெளிநாடுகளுக்குச் சென்றும் விட்டனர். இலங்கையில் மருத்துவ சேவையில் உள்ளவர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய ஆபத்து உருவாகுவதாக தகவல்கள் வெளிவருகின்றன.

இதனை ஆபத்தான விடயமாகவே பார்க்க வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் எமது நாட்டில் தொழல்வாண்மையாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டு விடுமோவென்ற அச்சம் ஏற்படுகின்றது. எமது நாட்டில் இலவசக்கல்வியை முழுமையாகப் பயன்படுத்தி விட்டு, நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் காரணமாக வைத்து தாய்நாட்டையே முற்றாக மறந்தபடி செல்கின்ற அவர்களின் செயலை நியாயப்படுத்த முடியாதிருக்கின்றது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது எக்காலமும் தொடரப் போவதில்லை. எமது நாட்டின் பொருளாதாரம் தற்போது படிப்படியாக சீரடைந்து வருகின்றது. சொந்த நலனில் அக்கறை செலுத்துகின்ற அதேவேளை, தாயகத்தின் மீதான பற்றுதலும் அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவுக்கு பொருளாதாரத்தை குவிக்கப் போகிறது சந்திரயான்!



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) அனுப்பிய சந்திரயான் 3 வெற்றிகரமாக நிலவில் கடந்த 23 ஆம் திகதி மாலை 6.04 மணிக்கு மெதுவாக தரையிறங்கி உலக நாடுகள் அனைத்தையும் நம் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இந்தச் சாதனை ஒட்டுமொத்த தேசத்தையும் பெருமைப்படுத்தியது மட்டுமல்லாமல், இந்தியாவின் பொருளாதாரத்தையும் அசுர வேகத்தில் வளர வைக்கும் என்று கூறப்படுகிறது.

நிலவின் தென்துருவத்தில் லேண்டரை 'மென்மையான தரையிறக்கம்' செய்த தன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனாவை தொடர்ந்து நிலவில் கால்பதித்த 4 ஆவது நாடாக இந்தியா சேர்ந்தது. அதோடு நிலவின் தென்துருவத்தில் கால்பதித்த முதல்நாடு என்ற பெருமையும் இந்தியாவையே சேரும்.

இந்த பெருமையான தருணத்தை உலகெங்கிலும் உள்ள இந்தியர்கள் கொண்டாடி பெருமிதம் கொள்கின்றனர். இந்தியாவின் அறிவியல் வளர்ச்சி ஒட்டு மொத்த தேசத்தையும் பெருமைப்படுத்தியது மட்டுமல்லாமல், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கக்கூடிய பல துறைகளுக்கான வாய்ப்புகளையும் அள்ளி வழங்குகிறது. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மாற வேண்டும் என்ற அதன் கனவை நெருங்கி வருகிறது.

## பங்குச் சந்தைகள் கிடுகிடுவென உயர்வு!







புதிய ஸ்டார்ட் அப்கள் மற்றும் உலகளாவிய முதலீட்டார்கள் விண்வெளி தொழில்நுட்பம், விண்வெளி, பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி, வளர்ச்சி போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள பல ஸ்டார்ட் அப்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இஸ்ரோவின் குறிப்பிடத்தக்க சாதனை வாய்ப்புகளின் புதிய அடிவானத்தைத் திறக்கவுள்ளது.

இதன் மூலம் தனியார் முதலீடுகள் உயரும். இந்தியாவில் ஏற்கனவே 140 பதிவுசெய்யப்பட்ட விண்வெளிதொழில்நுட்ப ஸ்டார்ட் செயலிகள் உள்ளன. அவை மட்டுமின்றி புதிதாக பல ஸ்டார்ட்அப்கள் உருவாகுவதோடு, உலகளாவிய முதலீட்டார்களை ஈர்க்கும்.

உலக விண்வெளிப் பொருளாதாரத்தில் இந்தியா தற்போது 23 சதவீத பங்களிப்பை வழங்கி வருகிறது. அடுத்த 8 தொடக்கம் 10 ஆண்டுகளில் அது 810 சதவீத பங்களிப்பை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது இந்தியாவை செலவு குறைந்த செயற்கைக்கோள் ஏவுதளமாக நிலைநிறுத்தும் மற்றும் உலகளாவிய வாய்ப்பு உருவாகலாம்.

இதன் மூலம் விண்வெளி மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளுக்கு ஊக்கம் பெருகும். இந்தியாவின் விண்வெளிப் பொருளாதாரம் 2025ஆம் ஆண்டுக்குள் 13 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தரையிறக்கம் இந்தியாவின் உள்நாட்டு தொழில்நுட்ப வல்லமையை வெளிப்படுத்துகிறது மற்றும் அதன் விஞ்ஞான மனநிலைக்கு புதுப்பிக்கப்பட்ட வீரியத்தை வழங்குகிறது. சந்திரனில் தரையிறங்கும் வெற்றியின் மூலம் ஆய்வு, உதிரிப்பாக உற்பத்தி, வழிசெலுத்தல் மற்றும் மேப்பிங், கண்காணிப்புத் தரவு, பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கிய விண்வெளித் துறையில் ஈடுபட்டுள்ள இந்தியாவில் உள்ள நிறுவனங்களில் புதுப்பிக்கப்பட்ட ஆர்வத்தை உருவாக்கும்.

இஸ்ரோவின் சந்திரயான் 3 வெற்றியானது 'மேக் இன் இந்தியா' பிராண்டை மேலும் வலுப்படுத்தும் மற்றும் செயற்கைக்கோள் அமைப்புகள், தொலைத்தொடர்பு மற்றும் பலவற்றை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் என்றும் நிபுணர்கள் தெரிவித்தனர். விண்வெளி ஆய்வு தொழில்நுட்பத்தை நோக்கி உபகரணங்களை வடிவமைத்தல், அசெம்பிள் செய்தல் மற்றும் சோதனை செய்தல் போன்றவற்றில் ஈடுபடும் நிறுவனங்களுக்கும் இந்த வெற்றி உதவிகரமாக இருக்கும்.

இது போன்ற வரலாற்று நிகழ்வுகள் இந்திய இளைஞர்களிடையே அதிகரித்த அறிவியல் மனப்பான்மைக்கு வழிவகுக்கின்றன. வளர்ந்து வரும் துறைகள் மற்றும் தொழில்நுட்பங்களில் தன்னிறைவுக்கான விரைவான பாதைக்கும் வழிவகுத்துள்ளது. மேலும் உலகின் முதல் 3 பொருளாதாரங்களில் ஒன்றாக இருப்பதற்கான நம்பிக்கையை ஊட்டுகிறது என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் ப்ளூம்பேர்க் முக்கியமான ஒரு ஆய்வை செய்து வெளியிட்டு உள்ளது. சந்திரயான் 3 விண்கலம் மற்றும் அதன் ரொக்கெட் தயாரிப்பில் தகவல் தொடர்பு மற்றும் எலக்டரோனிக்ஸ் பாகங்கள் முதல் உலோகங்கள், கருவிகள் வரையிலான பல்வேறு உபகரணங்களை வழங்கிய 13 இந்திய நிறுவனங்களின் பங்குகள் இந்த வாரம் மட்டும் சந்தை மதிப்பில் 2.5 பில்லியன் டொலருக்கு மேல் சேர்த்துள்ளது.

சந்திரயான் 3 திட்டத்தின் வெற்றி எந்த அளவுக்கு முக்கியம் என்பதை அறிந்துக் கொள்ள மிகவும் முக்கியமான சம்பவம் இது. அதாவது சந்திரயான் 3 திட்டத்தில் வெளியில் இருந்து பணியாற்றிய ISRO ஊழியர்கள் கடுமையான உழைப்பை வழங்கி உள்ளனர். இவர்களுக்கு வெளியில் இருந்து பல நிறுவனங்கள் உதவியுள்ளன. இப்படி சந்திரயான் 3 திட்டத்திற்கு உதவிய 13 நிறுவனங்களின் பங்குகள் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 20000 கோடி ரூபாய் மதிப்பிலான சந்தை மதிப்பு அதிகரித்துள்ளது. சந்திரயான் 3 திட்டத்தின் தாக்கம் இந்திய பங்குச்சந்தையிலும் உள்ளது.

எரிவாயு நிறுவனமான லிண்டே பங்குகள் இந்த வாரம் 23% க்கும் அதிகமாக உயர்ந்துள்ளன. இந்த பணிக்கான முக்கியமான மொடியூல் மற்றும் சிஸ்டம் வழங்கிய சென்டம் எலெக்ட்ரோனிக்ஸ், கிட்டத்தட்ட 11% உயர்ந்துள்ளது.

அதே நேரத்தில் செயற்கைக்கோள் தகவல் தொடர்பு வழங்குநரான Avantel 12% க்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. மூன் மிஷன் போன்ற முக்கியமான திட்டங்களில் பங்கேற்பது இந்த பிரிவில் உள்ள நிறுவனங்களுக்கு புதிய வாய்ப்புகளைத் திறக்கும். மேலும் இத்திட்டத்தின் வெற்றியின் மூலம் இந்த நிறுவனங்கள் வெளிநாட்டு விண்வெளி ஆராய்ச்சி அமைப்புகளுக்கும் உதவி செய்யும் முக்கிய விநியோகிஸ்தராக உயர முடியும்.

# இறக்காமம் பிரதேசத்தில் வளர்ந்து வரும் இளம் ஓவியர் யூசுப் ஸயான்

இறக்காமம் கமு/ சது/ அஸ்ரப் மத்திய கல்லூரியில் தரம் 7 இல் கற்கும் எம்.கே. யூசுப் ஸயான் என்பவர் சிறந்த ஓவியராகவும், புகைப்படக் கலைஞராகவும், குறும்பட நடிகராகவும் காணப்படுகின்றார்.

முகம்மது குத்தூஸ்_ பஸ்மியா ஆசிரிய தம்பதிகளின் மூத்த புதல்வராக 2011.12.13ஆம் திகதி அவர் பிறந்தார். இரண்டு வயதாக இருக்கும் போதே சித்திரம் வரைவதிலும் கழிவுப் பொருட்களை வைத்து ஆக்கங்களை உருவாக்குவதிலும் தனது திறமையைக் காட்டினார்.



வளரும் பயிரை முளையிலே தெரியும் என்ற புதுமொழிக்கமைவாக பல்வேறு கோணங்களில் தனது ஓவியத் துறையில் கால்களைப் பதித்துள்ளார். கோட்ட மட்ட பாலர் பாடசாலை சித்திரப் போட்டியில் முதலிடம் பெற்ற இவர் அன்று முதல் நடைபெறுகின்ற சித்திரப் போட்டிகளில் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இவ்வருடம் ரமழான் மாதம் முகநூலில் தனியார் நிருவனமொன்று நடத்திய அறபு எழுத்தணி திறந்த போட்டியில் தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றார். தற்போது தரம் 7 இல் கற்கும் அவர் இவ்வருடம் இறக்காமத்தில் சமுர்த்தி காரியாலயத்தினால் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தரம் 6,7,8 ஆகிய பிரிவுகளில் பங்கேற்று இறக்காமத்தில் முதலிடம் பெற்று வளரும் ஓவியர் என்ற நாமத்தைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு பல ஓவியப் போட்டிகளில் பல்வேறு விருதுகளைப் பெற்ற யூசுப்



ஸயான் குர்ஆன் மனன மத்ரசாவுக்கும் பகுதி நேரம் சென்று முன்னணி மாணவனாகத் திகழ்கின்றார். அதுமட்டுமல்ல ரோயல் கனிஷ்ட கல்லூரியின் முன்சுவரிலும் ஓவியத்தைத் தீட்டியுள்ளார்.

**எஸ்.எம்.அறூஸ்...**
(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)

# மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகளை வழங்கிய கல்முனை றோட்டரி கழகம்

கல்முனை றொட்டரி கழகத்தின் 2023/2024 ஆண்டிற்கான தலைவர் றொட்டேரியன் ஏ.எல்.ஏ. நாசர் தலைமையில் கல்முனை கல்வி மாவட்ட பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இவை யாவும் அவுஸ்திரேலியா கன்பேரா வெஸ்டர்ன் கிறிக் றொட்டரிக்கழகம் பிரதிநிதி றொட்டேரியன் த.ரவீந்திரன் முன்னிலையில் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம்(21.08.23 )மூன்று பாடசாலைகளுக்கு திராய்க்கேணி அ.தி.மு.க.க பாடசாலை, கோளாவில் விநாயகர் வித்தியாலயம் மற்றும் மாணிக்க





மடு அ.த.க பாடசாலை ஆகியவற்றிற்கு 155,000 ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான நிதியினை கன்பேரா வெஸ்டர்ன் கிறிக் றொட்டரி கழகம் வழங்கியது.அக்கழகத்தின் அங்கத்தவரான றொட்டேரியன் த.ரவீந்திரன் கலந்து கொண்டு அப்பியாசக்கொப்பிகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்விற்கு செயலாளர் றொட்டேரியன் கே. குகதாசன், சமூக சேவைகள் பணிப்பாளர் றொட்டேரியன் மு.சிவபாதசுந்தரம், றொட்டேரியன் மா. சிதம்பரநாதன் மற்றும் உறுப்பினர் றொட்டேரியன் என். றதீசன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாகும் என நலன்விரும்பிகள் கருத்துரைத்தனர்.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

# திருகோணமலை பிரதேச ஊடகவியலாளர்கள் மொழி மூலமான நல்லிணக்க களப்பயணம்

திருகோணமலை மாவட்டத்தில் மூவின மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஊடகவியலாளர்கள், ஊடக ஆர்வலர்களுக்கான மொழி கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டு பரஸ்பர ரீதியான சமூக நல்லிணக்கப் பயணமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் ஊடகர்களுக்கு சிங்கள மொழி கற்கையும், சிங்களம் பேசுவோர்களுக்கு தமிழ்மொழி கற்கையும் நடத்தப்பட்டுள்ளது. குறித்த பாடநெறிகளை திருகோணமலையில் உள்ள எழுத்தாணி அமைப்பு முற்றுமுழுதாக இலவசமாக வழங்கியுள்ளது. இதன் மூலம் இப்பயிற்சி (50 பே) 150 மணித்தியாலங்கள் கொண்ட பாடநெறியாக தொடரப்பட்டுள்ளது.இதன் மூலம் சமாதான நல்லிணக்க சக வாழ்வு உறுதிப்படுத்தப்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாக சிங்களமொழி பேசுவோர் தமிழ் பேசும் வீட்டுக்கு நல்லிணக்க பயணம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான பாடநெறி மூலம் சகவாழ்வினை ஏற்படுத்தும் நோக்கில் கண்டிக்கு ஒரு நாள் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டு அங்குள்ள தமிழ், சிங்கள மொழி ஊடகர்களை சந்தித்து கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான பாடநெறி மூலம் புரிந்துணர்வினை மேம்படுத்தவும் இன மத கலாசார பண்புகளை புரிந்து கொள்ளவும் வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன.

"இந்தப் பாடநெறிக்கு வரும் முன்னர் சிங்களமொழி பேசவோ எழுதவோ தெரியாது. தற்போது ஓரளவேனும் பேசக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. இதன் மூலம் சிங்கள சகோதரியின் வீட்டுக்கு சென்ற வேளையில் அவர் என்னை மிகவும் ஆதரித்ததுடன் அவர்களது பௌத்த மதம் கலாசாரம் போன்றனவற்றை அறியக் கிடைத்தது. முதற் தடவைதான் இவ்வாறு அவர்களது வீட்டுக்கு சென்று விருந்துபசாரங்களிலும் ஈடுபட்டேன். மிக்க சந்தோசமான





இந்தப் பயணம் ஒரு விசேடமான அனுபவத்தை தந்துள்ளது" என்று ஊடகவியலாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

"தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமையில் விரிசல் ஏற்பட மொழி ஒரு காரணமாக உள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசுவது குறைவு. மொழி என்பது இந்த நாட்டில் கட்டாயமானது. இவ்வாறான திட்டங்களினூடாக நல்லிணக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக காணப்படுகிறது" என்று மற்றொரு ஊடகவியலாளர் தெரிவித்தார்.

"திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரமே மூவினத்தையும் சேர்ந்த ஒரு ஊடக சங்கம் திறம்பட செயற்பட்டு வருகிறது. ஒரு சமூகத்தின் கலை கலாசார பாரம்பரியம் மற்றும் அதன் மூலமான சக வாழ்வு நல்லிணக்கமும் தோன்றுகிறது. குறித்த சமூக வெளிப்பாடு மூலமாக அனைவரும் ஒன்றாய் புரிந்துணர்வுடன் கூடிய நிலை இதன் மூலம் கட்டியெழுப்பப்படுகிறது. குறித்த பாடநெறி மூலமாக ஒரு நாள் கொண்ட கண்டி களவிஜயம் ஊடாக மாற்று மத சமூகத்தவரின் மொழித் துறை மூலமாக எங்களுக்குள் காணப்படும் சகவாழ்வினை புரியக்கூடியதான வாய்ப்பு கிட்டியது" என்று மற்றொருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறாக நாட்டின் ஏனைய மாவட்டங்களில் சிங்கள, தமிழ் களப்பயணம் ஊடாக கற்று அனுபவங்களை பகிர்வதன் மூலம் சிங்கள தமிழ் என்ற பாகுபாடு இன்றி ஒற்றுமையாக வாழ முடியும் என எதிர்பார்க்கலாம்.

மக்கள் மத்தியில் குழப்பமற்ற இனமத வாத போக்கற்ற நிலையின்றி வாழ்வதற்கு மொழியின் முக்கியம் முக்கியமாக காணப்படுகிறது. எமது குழுவினரது களப்பயணம் ஊடாக பல அனுபவங்களை கற்க நேரிட்டது. குழுக் கலந்துரையாடல் மூலமாக நல்லுறவு பலப்படுத்தப்பட்டது. ஒரே பேரூந்தில் நாம் சென்று கண்டி ஊடகர்களுடனான மையக்குழு கலந்துரையாடல் ஊடாக அனுபவப் பகிர்வின் போது மேலும் சமூக நல்லிணக்கத்துக்கு வழிகோலியது" என்று ஊடகவியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

**ஹஸ்பர் ஏ. ஹலீம்...**
(தம்பலகாமம் குறூப் நிருபர்)

# புத்தளம், சிலாபம் வலய பாடசாலைகளில் திறன்பலகைகளினூடு கற்றல் செயற்பாடுகள்

வடமேல் மாகாணத்திலுள்ள புத்தளம் மற்றும் சிலாபம் கல்வி வலயங்களில் முதல் கட்டமாக 14 பாடசாலைகளில் திறன்பலகைகள் பொருத்தப்பட்ட திறன்வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றல்கற்பித்தல் செயற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

திறன்பலகைகளை வழங்கி திறன்வகுப்பறைகளை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளை IMHOUSA மற்றும் Ratnam FoundationUK நிறுவனங்கள் மேற்கொண்டது மட்டுமன்றி, அவ்வப் பாடசாலை ஆசிரியர்களுக்கு மூன்று நாட்கள் கொண்ட பயிற்சிகளும் திறமையான வளவாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டிருந்தது.







இதற்கு மேலதிகமாக வகுப்பறை செயற்பாடுகளை what's up குழுமத்தினூடு அறிந்து கொள்வதிலுள்ள நாட்டங்களும் ஆசிரியர்களுக்கான ஓர் ஊக்குவிப்பாக அமையப் பெற்றுள்ளமை சிறப்பான அம்சமாக நோக்கப்படுகின்றது.

திறன்வகுப்பறைகளை திறந்து வைக்கும் ஆரம்ப வைபவங்களில் புத்தளம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பணிப்பாளர் கமலேந்திரன் அவர்களும் சிலாபம் கல்வி வலயத்தின் தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கான பணிப்பாளர் திருமதி ஹனித்தா கமலேந்திரன் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் அருணாகரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இவர்களுடன் இதன் இணைப்பாளரான நாயக்கர்சேனை தமிழ் வித்தியாலய அதிபர் இராமநாதன் பங்கேற்றார்.

இதற்கு அடுத்த கட்டமாக மேலும் 6 பாடசாலைகள் பரிந்துரை செய்யப்பட்டு திறன் வகுப்பறைகளை திறந்து வைப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை யாவும் IMHOUSA அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளரும் ஓய்வு நிலை வலயக் கல்விப்பணிப்பாளருமாகிய கிருஷ்ணகுமார் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிக நிதி செலவிடப்பட்டு தோல்வியை தழுவிய திட்டம் மத்தள விமான நிலையம்!




இலங்கையில் வெற்றியளிக்காது போன திட்டங்களில் ஒன்றுதான் மத்தள விமான நிலையம் ஆகும். கடந்த கால அரசாங்கமொன்றின் திட்டங்களில் அதிக நிதி செலவிடப்பட்ட தோல்வியான திட்டமாக மத்தள விமான நிலைய நிர்மாணத்தைக் குறிப்பிடலாம்.

பெரும் எதிர்பார்ப்புகளுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த பாரிய விமான நிலையத்தினால் எதிர்பார்த்தபடி வருமானத்தை ஈட்ட முடியவில்லை. அதற்கு மாறாக நஷ்டத்திலேயே இந்த விமானநிலையம் இயங்கி வருகின்றது.

எதிர்பார்த்தபடி விமானங்கள் அங்கு வருவதில்லை. அது சர்வதேச விமான நிலையமாக இருந்த போதிலும், களையிழந்து போன விமான நிலையமாகவே உள்ளது. கடந்த கால ஆட்சியின் போது இலங்கைக்கு பெரும் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்திய திட்டமாக மத்தள விமானநிலையம் உள்ளது.

2017 ஆம் ஆண்டு முதல் 2022 வரையிலான 5 ஆண்டு காலப்பகுதியில் மத்தள சர்வதேச விமான நிலையத்தின் மொத்த நட்டம் 4,281 கோடி ரூபாய் என கடந்த வருடம் தகவல் வெளியாகியிருந்தது.

அதேசமயம் மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலையத்திற்கு கடந்த வருடம் மாத்திரம் 2,221 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனத்தின் கணக்காய்வுகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் செயற்பட ஆரம்பித்த 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான 5 வருடங்களில் ஏற்பட்ட மொத்த நட்டம் 4,281 கோடி ரூபா என தேசிய கணக்காய்வு அலுவலகம் நடத்திய கணக்காய்வில் தெரியவந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் விமான நிலையத்தின் செயற்பாட்டுச் செலவு 203 கோடி ரூபா என்றும், இது அதன் இயக்க வருமானத்தை விட 26 மடங்கு அதிகம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

சர்வதேச நாடுகளுக்கான சேவையில் ஈடுபடுகின்ற விமானங்கள் எரிபொருள் நிரப்பிச் செல்வதற்காக மத்தள விமான நிலையத்துக்கு வந்து செல்லுமென்ற எதிர்பார்ப்பு ஆரம்பத்தில் நிலவியது. ஆனால் எதிர்பார்த்தவாறு எரிபொருள் நிரப்பிச் செல்வதற்கு ஓரிரு விமானங்களே இதுவரை அங்கு வந்துள்ளன. ஆகவே தொடர்ந்தும் நஷ்டத்தில் இயங்கி வருகின்ற விமான நிலையமாகவே மத்தள விமான நிலையம் காணப்படுகின்றது.

அத்துடன், மத்தள சர்வதேச விமான நிலையத்தின் வருடாந்த பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், கடந்த வருடம் 11,577 விமானப் பயணிகளே விமான நிலையத்தின் ஊடாக பயணித்துள்ளனர். அதேவேளை, கடந்த 2017 முதல் 2022 வரையான 5 வருடங்களில் 103,324 பயணிகளே இவ்விமான நிலையத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

இவையெல்லாம் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கைகள் அல்ல. அதிகளவு விமானங்கள் வருமென்றும், அதிக பயணிகள் வருவரென்றுமே எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 3,656 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், அதற்காகப் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகை 1,900 கோடி ரூபாவாகும்.

எவ்வாறாயினும், விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனம் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடனுக்காக 2022 ஆம் ஆண்டு 184 கோடி ரூபா கடன் தவணை செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தை சர்வதேச சிவில் விமான நிலையமாக செயற்படுத்துவது இலங்கை அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானமே தவிர, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தனியார் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல என முன்னர் செய்தி வெளியாகியிருந்தது.

மத்தள விமான நிலையத்தின் நஷ்டங்கள் ஒருபுறமிருக்க, அவ்விமான நிலையத்தின் நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டுமானால் அதன் பங்குகளில் ஒரு பங்கினை விற்பனை செய்ய வேண்டும் என்று அரசாங்க தரப்பில் அமைச்சர்கள் சிலர் எண்ணம் கொண்டுள்ளதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

குறித்த விமான நிலையத்திற்கு விமானங்கள் வருகை தராத காரணத்தினால் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு வருவதை ஈடு செய்வதற்காகவே இந்த யோசனையை அரசதரப்பிலும் பலர் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.



**தொடர்ந்து ஏற்பட்டுவரும் நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டுமானால், அதன் பங்குகளை விற்பனை செய்வது அல்லது தனியார்மயப்படுத்துவ–துதான் சிறந்த வழி!**

மேலும் 100 மில்லியன் டொலர் கடன்களை பெற்றே இந்த விமான நிலையத்தை புனரமைத்துள்ளதாகவும் அதற்கான கடனையும் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் மத்தள சர்வதேச விமான நிலையத்தை தனியார் மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் அரசாங்க தரப்பினுள் பலர் கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

விமான நிலையத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி பங்குகள் விற்கப்பட வேண்டும். அத்துடன் மத்தள விமான நிலையத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்ற வேண்டும் என அரச தரப்பில் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.

நாட்டில் விமானப் போக்குவரத்து செயல்முறையை மறுசீரமைக்கும் போது அந்நிய செலாவணியை ஈட்டும் வகையில் விமான நிலையம் மாற்றப்பட வேண்டும் என்பதே முக்கியமானது.

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள மஹிந்த ராஜபக்ச விமான நிலையம் உண்மையில் மூடப்படும் அபாயத்தில் இருப்பதாகவே எண்ண வேண்டியுள்ளது.

மத்தள ராஜபக்ச விமான நிலையத்துக்கான, சேவைகளை மேற்கொண்டு வந்த கடைசி விமான நிறுவனமும் அதனைக் கைவிட்டுள்ளது. இது விடயம் குறித்து மத்தள விமான நிலைய முகாமைத்துவத்துக்கு ஏற்கனவே 'பிளை டுபாய்' நிறுவனம் அறிவித்துள்ளது என்று தகவல்கள் வந்திருந்தன.

மத்தள விமான நிலையத்துக்கு 'பிளை டுபாய் நிறுவனம்' மாத்திரமே வாரத்தில் நான்கு சேவைகளில்ல் ஈடுபட்டு வந்தது. போதிய பயணிகள் இல்லாமையால், வருமானம் கிடைக்கவில்லை என அந்த நிறுவனமும், சேவையை நிறுத்திக் கொள்ளப் போவதாக அறிவித்திருந்தது.

**எஸ். சாரங்கன்...**

# சிறந்த தனிநபர் விற்பனைப் பணியாளர்களை கௌரவித்த அலியான்ஸ் மில்லியனர்கள் கழகம்

இலங்கையின் காப்புறுதி நிறுவனமான அலியான்ஸ் லங்கா சமீபத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் அதன் மிகச் சிறந்த தனிநபர் விற்பனைப் பணியாளர்களை பெருமையுடன் கொண்டாடி கௌரவித்துள்ளது. நிர்ணயிக்கப்பட்ட விற்பனை இலக்குகளைத் தாண்டி நிகரற்ற அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாட்டை வெளிப்படுத்திய அலியான்ஸ் மில்லியனர்கள் கழகத்தின் அதிசிறந்த சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆண்டு விழா, வஸ்கடுவவில் உள்ள சிட்ரஸ் என்ற ஆடம்பர ஹோட்டலில் ஒரு இரவு தங்குவதற்கான ஏற்பாட்டையும் உள்ளடக்கியிருந்ததுடன், இந்த உயர் சாதனையாளர்களுக்காக மறக்க முடியாத நினைவாக, முதல்முறையாக இவ்வாறு வெளியில் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



அலியான்ஸ் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இலங்கைக்கான முகாமையாளரான அலன் ஸ்மி, பிரதம விநியோக அதிகாரி ரங்க டயஸ், தேசிய விற்பனைத் தலைவர் ஜயநாத் அல்விஸ், தனிநபர் விற்பனைத் துறை தலைவர் பிரசன்ன கொடிகார மற்றும் பிரதான சந்தைப்படுத்தல் அதிகாரி கசுன் யட்டவர ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். 2022 ஆம் ஆண்டில் ஏனையவர்களுக்கு முன்னுதாரணமாக 31 பேர் மில்லியனர்கள் கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளதுடன், இது அவர்களின் ஓயாத அர்ப்பணிப்பு மற்றும் மிகச்சிறந்த விற்பனை திறமைக்கு சான்றாகும்.

இந்த விற்பனை சாதனையாளர்களின் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை பிரதிபலிக்கும் வகையில், தலைமை விநியோக அதிகாரியான ரங்க டயஸ் கருத்து வெளியிடுகையில், “எமது மில்லியனர்கள் கழக உறுப்பினர்கள் உண்மையிலேயே அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றிற்கு மீள்வரைவிலக்கணம் வகுத்துள்ளனர்” என்று குறிப்பிட்டார்.

அலியான்ஸ் லங்கா முன்னோக்கி தனது பயணத்தைத் தொடரும் போது, அதன் விற்பனை ஆளணியை வலுப்படுத்துவதற்கும், சாதனைகள் கொண்டாடப்படுகின்ற மற்றும் புதிய இலக்குகள் இன்னும் அதிக இலட்சிய நோக்குடன் நிர்ணயிக்கப்படுகின்ற, ஒரு ஒத்துழைக்கும் சூழலை வளர்ப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. அலியான்ஸ் மில்லியனர்கள் கழகமானது வெற்றியின் கலங்கரை விளக்கமாக தலைநிமிர்ந்து நிற்பதுடன், நிறுவனத்தின் தற்போதைய சிறப்பான பயணத்திற்கு பங்களிக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## சிங்கப்பூர் வணிக... (03ஆம் பக்கத் தொடர்)

துறைசார் மேற்பார்வைக் குழுவில் தலைவர் உட்பட 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த மேற்பார்வைக் குழு சமர்ப்பித்த அறிக்கையில், குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும உள்ளிட்ட ஆறு பேர் கைச்சாத்திட்டுள்ளதுடன், ஏனைய உறுப்பினர்கள் அதில் கைச்சாத்திடவில்லை. அந்த வகையில், அறிக்கை தொடர்பாக குழுவின் நிலைப்பாடு என்ன? சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அவர்கள் ஏற்கவில்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான வழக்கு, சிங்கப்பூர் வணிக மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுவதை அனைவரும் தவிர்த்துக்கொள்ள வேண்டுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## முன்பள்ளி ஆசிரியர்களின்...

போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க,

"குழந்தை பிறந்தது முதல் 18 வயது வரை சிறுவர்களாகவே அவர்கள் கருதப்படுகின்றார்கள்.

எனவே அவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி என்பன தொடர்பாக நாம் கவனம் செலுத்த வேண்டும். அந்த வகையில், எமது அரசாங்கமும் இந்த விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தி வருவதுடன், பெண்கள் மற்றும் சிறுவர்களின் மேம்பாடு தொடர்பாக பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுப்படுகின்றன" எனத் தெரிவித்தார்.

## சரத் வீரசேகர MPக்கு எதிராக ...

நீதித்துறை சுதந்திரத்தை கேள்விக்குட்படுத்தும் வகையிலும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையை கண்டித்து இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட நீதிமன்றங்களுக்கு முன்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்து நேற்றுக் காலை 9.30 மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை சட்டத்தரணிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது 'கௌரவ நீதிபதிகளின் கடமையில் தலையிடாதே', 'சுயாதீனமான நீதித்துறையின் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்', 'நீதித்துறையின் சுதந்திரத்துக்கு களங்கத்தை ஏற்படுத்தாதே', 'பாராளுமன்ற சிறப்புரிமையை துஷ்பிரயோகம் செய்யாதே' உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை சட்டத்தரணிகள் தாங்கியிருந்தனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர பாராளுமன்றத்தில் அவதூறான வார்த்தைகளை பிரயோகித்து உரை நிகழ்த்தியமையை கண்டித்து நேற்று (25) காலை மன்னார் மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணிகளும் அடையாள பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணம், சாவகச்சேரி உட்பட வடக்கில் அனைத்து பகுதிகளிலும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுக்கு எதிராக சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## அலி சப்ரி ரஹீம் MP... (03ஆம் பக்கத் தொடர்)

பெறுமதியான தங்கம் மற்றும் ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை சுங்கத் திணைக்களம் அரசுடமையாக்கியது. இந்தச் சம்பவம் தொடர்பாக சுங்கத் திணைக்களம், கடந்த ஜுன் 14ஆம் திகதி பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தது. அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 2018.03.07ஆம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவையை மீறியுள்ளார்.

அத்துடன், மக்கள் பிரதிநிதியென்ற அடிப்படையில் மக்களின் நம்பிக்கையையும் சிதைத்துள்ளாரென்றும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வறுமை ஒழிப்புத்... (03ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் வீடமைப்புத் திட்டத்தை சர்வதேச மாநாட்டுக்கு கொண்டு சென்று சிறப்பு விருதையும் அவர் பெற்றுக்கொண்டவராவாரெனவும், பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## விளையாட்டுத்துறை... (03ஆம் பக்கத் தொடர்)

ஊழல் மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் போது, அதற்கு எதிராக சிலர் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதிக்கும் எனக்கும் இடையில் பிணக்குகளை ஏற்படுத்தவும் அரசாங்கத்திலுள்ள சிலரே முயற்சித்து வருகின்றனர். சிலர், இந்த விளையாட்டுத்துறை அமைச்சை பெற்றுக்கொள்ள விசர் நாய்களை போன்று திரிகின்றனர். இதற்கு காரணம் சில விளையாட்டு சங்கங்களில் புழங்கும் நிதியாகும்.

விளையாட்டுத்துறை அமைச்சரென்ற வகையில் அனைத்து விடயங்களிலும் தலையிடுவதற்கு நான் விரும்பவில்லை. நான் தவறு செய்தால் அதனை எவரும் சுட்டிக்காட்டலாம். என்னுடைய சுயாதீனத்தை நான் மதிக்கிறேன். அதேபோன்று, விளையாட்டு சங்கங்களினது சுயாதீனத்தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற இந்த விடயங்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு செல்லும் போது, பணத்துக்காக கோப்புகளை மறைக்க முயற்சிக்கப்படுகிறது. இத்தகைய நிலைமைகளை மாற்றியமைக்க அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்" எனத் தெரிவித்தார்.

## சிறந்த தமிழ்த் திரைப்படமாக... (03ஆம் பக்கத் தொடர்)

சிறந்த பிரபலமான திரைப்படம்: ஆர்ஆர்ஆர்
சிறந்த ஹிந்தி திரைப்படம்: சர்தார் உத்தம்
சிறந்த தெலுங்கு படம்: உப்பெனா
சிறந்த தேசிய ஒருமைப்பாட்டு திரைப்படம் : தி காஷ்மீர் ஃபைல்ஸ்
சிறந்த குஜராத்தி திரைப்படம்: செல்லோ ஷோ
சிறந்த கன்னட திரைப்படம்: 777 சார்லி
சிறந்த மராத்தி திரைப்படம்: ஏக் தா காய்சாலா
சிறந்த மலையாள திரைப்படம்: ஹோம்
சிறந்த இயக்குநர்: நிகில் மஹாஜன் (தி ஹோலி வாட்டர்)
சிறந்த நடிகர்: அல்லு அர்ஜுன் (புஷ்பா)
சிறந்த நடிகை: ஆலியா பட் (கங்குபாய் காத்தியவாடி), கீர்த்தி சனோன் (மிமி)
சிறந்த துணை நடிகர் (ஆண்): பங்கஜ் திரிபாதி (மிமி)
சிறந்த துணை நடிகை: பல்லவி ஜோஷி (தி காஷ்மீர் ஃபைல்ஸ்)
சிறந்த குழந்தை நட்சத்திரம்: பாவின் ரபாரி (செல்லோ ஷோ)

## இலங்கையில் தீவிரமாக தேடப்படும்...

பதுங்கியிருப்பதாக மத்திய குற்றப்பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மத்திய குற்றப்பிரிவின் இணை பொலிஸ் கமிஷனர் சரணப்பாவின் உத்தரவுக்கமைய, இலங்கையைச் சேர்ந்த கும்பலை பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்நிலையில், பெங்களூர் எலகங்கா பொலிஸ் எல்லைக்குட்பட்ட ஜக்கூர் லேஅவுட்டிலுள்ள ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் அந்தக் கும்பல் பதுங்கியிருப்பது தொடர்பான தகவல் பொலிஸாருக்கு கிடைத்தது.

இதனையடுத்து, அந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் அதிரடி சோதனை நடத்திய போது, ஜெய் பரமேஸ் என்ற ஜாக் என்பவருடைய அடுக்குமாடிக் குடியிருப்பில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் பதுங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் குடியிருப்பில் சோதனை நடத்திய பொலிஸார், இலங்கையைச் சேர்ந்த இந்த 3 பேருடன், அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த ஜெய் பரமேஸையும் கைது செய்துள்ளனர்.

விசாரணையின் போது இலங்கையைச் சேர்ந்த காசின்குமார், அமில நுகான், ரங்க பிரசாத் ஆகியோரே கைதானவர்களெனத் தெரியவந்ததுடன், இவர்கள் மூவர் மீதும் இலங்கையில் பல்வேறு பொலிஸ் நிலையங்களில் பல வழக்குகள் இருப்பதும் தெரியவந்தது. காசின்குமார் மீது 4 கொலை வழக்குகளும், அமில நுகான் மீது 5 கொலை வழக்குகளும், ரங்க பிரசாத் மீது 2 கொலை, 2 கொலை முயற்சி உள்ளிட்ட வழக்குகளும் இருப்பதும் தெரியவந்தது. கூலிப்படையினர் போன்று இந்த 3 பேரும் செயற்பட்டு வந்துள்ளதாகவும் தெரியவந்தது.

இந்தக் கொலை வழக்குகளில், இலங்கை பொலிஸாரிடம் சிக்காமல் இவர்கள் தலைமறைவாக இருந்த நிலையில், இவர்களை பொலிஸார் தேடப்படும் குற்றவாளிகளாக அறிவித்திருந்ததும் தெரியவந்தது.

ஜலால் என்பவர் கூறியதன் அடிப்படையில், தான் கைதான 3 பேருக்கும் ஜெய் பரமேஸ் தன்னுடைய குடியிருப்பில் அடைக்கலம் கொடுத்திருந்தார். ஜலால் ஏற்கெனவே ஓமான் நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அவர் போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது.

அதேநேரத்தில் இலங்கையைச் சேர்ந்த இந்த 3 பேரும் கடந்த 21 நாட்களுக்கு முன்பாகவே சட்டவிரோதமாக பெங்களூர் வந்து பதுங்கியிருந்துள்ளனர். இதற்காக இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக படகு மூலம் சென்னை வந்து, அங்கிருந்து பெங்களூர் சென்றிருந்தனர். அதாவது வீஸா, கடவுச்சீட்டு இல்லாமல் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்து இந்த 3 பேரும் தங்கியிருந்ததாக, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முதற்கட்டமாக கொலை வழக்குகளில், இலங்கை பொலிஸாரிடம் சிக்காமல் இருக்க இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்து பெங்களூரில் பதுங்கியிருந்தது தெரியவந்தது. இருப்பினும், 3 பேரும் பெங்களூரில் தங்கியிருக்க வேறேதும் காரணமா?, ஜலாலுடன் சேர்ந்து வேறு குற்றங்களில் ஈடுபட்டனரா? விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் 3 பேருக்கும் ஏதேனும் தொடர்புள்ளதா? என்பது தொடர்பாக விசாரணை செய்து தகவல் பெற பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த 3 பேருக்கும் அடைக்கலம் கொடுத்ததாக கைதாகியுள்ள ஜெய் பரமேஸ் மீது எச்.ஏ.எல். பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட எல்லையில் நடந்த கொலை வழக்கொன்றில் தொடர்பிருப்பதாகவும், பெங்களூரில் அவர் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்ததாகவும் மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதான காசின்குமார், அமில நுகான், ரங்க பிரசாத்திடமிருந்து 13 செல்போன்கள், சிலருடைய ஆதார், வாக்காளர் அடையாள அட்டைக்கான நகல்கள் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும் பத்திரிகைகளில் வெளியாகியிருந்த சில புகைப்படங்களை வெட்டி அவர்கள் வைத்திருந்தனர். அவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதான 4 பேர் மீதும் எலகங்கா பொலிஸார் வழக்குப்பதிவு செய்து , சதி செயலில் ஈடுபட அவர்கள் திட்டமிட்டனரா? எனும் கோணத்திலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கையை சேர்ந்த 3 பேரும் இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக தங்கியிருந்ததாகவும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 03 பிள்ளைகளின் தாய்...

இரண்டாவது கணவனால் கொலை செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இவரது மரணம் தொடர்பான பரிசோதனை நீதிபதி கே.ஜீவராணி முன்னிலையில் ஹோட்டலில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக தியத்தலாவை தள வைத்தியசாலையில் ஒப்படைத்து, அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

கொலை செய்யப்பட்ட இப்பெண்ணுக்கு இதற்கு முன்னரான திருமணத்தில் 20 வயதுடைய பெண் பிள்ளையொன்று உள்ளதாகவும் இரண்டாவது திருமணத்தில் இரண்டு பிள்ளைகள் உள்ளதாகவும் களனி, கோனமுல்ல பிரதேசத்தில் வாழ்ந்து வந்த இவர், அங்கு பிடிக்கவில்லையெனக் கூறி மீண்டும் தனது இரு பிள்ளைகளுடன் அட்டம்பிட்டிக்கு வந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இப்பெண்ணின் இரண்டாவது கணவனெனக் கூறும் சந்தேகநபர் கடந்த 23ஆம் திகதி பண்டாரவளை, தந்திரிய பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றின் அறையில் தங்கியிருந்த போது நேற்று முன்தினம் (24) காலை கொலை செய்யப்பட்ட பெண் ஹோட்டலுக்கு வந்து, அறையில் தங்கியிருந்ததாகவும் மனைவிக்கு உணவு எடுத்துவர வெளியில் செல்வதாகவும் கூறி சந்தேகநபர் சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவரின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட ஹோட்டல் ஊழியர், அறைக்கு சென்று பார்த்த போது, கட்டிலில் இரத்த வெள்ளத்தில் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் இப்பெண் சடலமாக கிடந்ததாகவும் இது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு ஹோட்டல் நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் ஹோட்டல் முழுவதும் பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர். இதற்கிடையில், கொலையாளி ரயிலில் தப்பிச் சென்றதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தினர்.

படத்தில் காணப்படும் நபர் தலைமறைவாகியுள்ளதாகவும் அவர் தொடர்பாக தகவல் தெரிந்திருப்பின் உடனடியாக பண்டாரவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் 071 – 8591523 என்ற இலக்கத்துக்கோ அல்லது குற்றப்புலனாய்வுப் பிரிவினுடைய பொறுப்பதிகாரியின் 071 8710108 / 071 8594033 என்ற தொலைபேசி இலங்கங்களுக்கோ தொடர்புகொள்ள முடியுமென, பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

## அதிக வருமானம்...

நேற்று (25) முற்பகல் அம்பாறை மாவட்டத்தின் அறுகம்பே மற்றும் பீனட் பாம் கடற்கரைகளை பார்வையிடும் கண்காணிப்பு விஜயத்திலும் ஈடுபட்டார்.

அந்த சுற்றுலாப் பிரதேசங்களின் குறைபாடுகளை ஆராய்ந்த பின்னர், அங்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகளுடன் ஜனாதிபதி சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

அதன் பின்னர், அப்பகுதியைச் சேர்ந்த வணிகர்களுடன் கலந்துரையாடி, சுற்றுலாத்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

அறுகம்பே கடற்கரைப் பிரதேசத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்கையில் அங்குள்ள மீன்பிடித் துறைமுகத்தை தேவையான வசதிகளுடன் வேறு இடத்துக்கு மாற்றுவது தொடர்பான யோசனையை ஜனாதிபதியிடம் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரசிங்க முன்வைத்தார். அது தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி , இப்பிரதேசத்தை சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இங்கு சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுவோருக்கு வியாபார ஸ்தலங்களுக்கான நிரந்தர அனுமதிப் பத்திரம் இன்மையால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இது தொடர்பாக உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் இதற்கு தீர்வுகளை வழங்குமாறும் உரிய அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

வர்த்தக தளங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் எதிர்நோக்கும் குடிநீர் பிரச்சினை தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அறுகம்பே பிரதேசத்தின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காண உத்தேச கெடஓயா குடிநீர் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைய இன்னும் சில வருடங்கள் செல்லுமென்பதால், கடற்படையின் உதவியுடன் தற்போதுள்ள சிறிய நீர் மூலங்களுக்கு மீள்சுழற்சி செய்யும் நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை நிறுவுவது தொடர்பாக ஆராயுமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இங்கு மேலும் தெரிவித்த போது,

"கடந்த ஆண்டு எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. அதன் காரணமாக நாம் கடனாளி நாடாக மாறினோம். அரசாங்கம் முன்னெடுத்துள்ள சரியான வேலைத்திட்டத்தால் இந்த வருடம் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டாலும், அந்தக் கடன்களை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், நாட்டை முன்னேற்றுவதற்கு அந்நியச் செலாவணி அவசியம். எனவே, வர்த்தக நிலுவையை எமக்குச் சாதகமாக பராமரிக்காவிட்டால், இன்னும் 10 ஆண்டுகளில் கடன் அதிகரித்து மீண்டும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

அதை தவிர்ப்பதற்காக, புதிய திட்டங்களைச் செயற்படுத்த முடிவு செய்துள்ளோம். கிழக்கு மாகாணம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்காக புதிய திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருகோணமலை மாவட்டத்தின் அபிவிருத்திக்கு இந்தியாவின் ஆதரவு கிடைத்துள்ளது.

மகாவலி திட்டத்தின் இடது கரையிலுள்ள காணிகளில் ஒருபகுதியை உள்ளடக்கி அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்தும் போது, சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் முதலீட்டு வலயமும் உருவாக்கப்படவுள்ளது. சுற்றுலாத் துறையை முன்னேற்றும் அதேவேளை, விவசாய நவீனமயமாக்கல் திட்டத்துடன் மீன்பிடித்துறை அபிவிருத்திக்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும். இப்பகுதியில் மிகவும் வறிய மக்கள் வசிக்கின்றனர். அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அம்பாறை மாவட்டத்தில் மீன்பிடித் துறை நவீனமயமாக்கலைப் போன்றே, விவசாய நவீனமயமாக்கலும் மேற்கொள்ளப்பட வேண்டும். நெல் பயிர்செய்கையினூடாக ஒரு ஹெக்டெயாரிலிருந்து குறைந்தது 07, 08 மெற்றிக்டொன் அறுவடையாவது பெற வேண்டும். கால்நடை வளர்ப்பு தொடர்பாகவும் புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் பத்தாண்டுகளில், இந்த நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 25 இலட்சத்திலிருந்து 50 இலட்சமாகவும் அதன் பிறகு ஒரு கோடியாகவும் அதிகரிக்கப்பட வேண்டும். 2035ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% சுற்றுலாத்துறையிலிருந்து கிடைக்குமென்று அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே, அவர்களின் பங்களிப்பு தொடர்பாக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்கமைய வருடாந்தம் இப்பிரதேசத்துக்கு குறைந்தபட்சம் 1020 இலட்சம் சுற்றுலாப் பயணிகளையாவது கொண்டுவர வேண்டும். ஒரு சுற்றுலாப் பயணி தினமும் 300 அல்லது 500 டொலர்கள் செலவு செய்யும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். அது தொடர்பான திட்டங்களை கிழக்கு மகாணத்திலிருந்து செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று ஒரு வித்தியாசமான சுற்றுலாத் துறை உள்ளது. ஒரு பகுதியினர் இந்த மாகாணங்களுக்கு வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ள நீர்ச்சறுக்கு போன்ற விளையாட்டுகளை இங்கு ஊக்குவிக்க வேண்டும். இப்பகுதியை சுற்றுலா வலயமாக மாற்ற வேண்டும்.

மேலும், இந்த நகர மற்றும் கிராமத்தின்அபிவிருத்திக்கான திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சுற்றுலா வளர்ச்சியையும், மக்களின் வாழ்க்கையையும் ஒருபோதும் குழப்பிக்கொள்ளக் கூடாது. அத்துடன், அம்பாறை பஸ் நிலைய அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அம்பாறை மாவட்டத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை சில நாட்கள் தங்க வைக்க முறையான ஏற்பாடு அவசியம். மேலும், முழு நாட்டையும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக மாற்றவும், சுற்றுலாத்துறையின் வருமானத்தை அதிகரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## வனஜீவராசிகள் பாதுகாப்பு...

பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேத்துச்சேனை கிராமத்திலேயே நேற்று முன்தினம் (24) இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் அந்தக் கிராம மக்கள் யானைகளை கட்டுப்படுத்துவதற்காக வெல்லாவெளியில் அமைந்துள்ள வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்துக்கு அறிவித்த போது, குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த திணைக்கள உத்தியோகத்தர்கள் யானைகளை கட்டுப்படுத்தி விரட்ட முயன்றனர். அவ்வேளை கட்டுக்கடங்காத யானையொன்று அந்த உத்தியோகத்தரை எதிர்த்து தாக்கியது. இதில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் வெல்லாவெளி காரியாலய உத்தியோகத்தரான நுவரெலியாவைச் சேர்ந்த 30 வயதான செல்வராஜ் சிறிதரன் என்பவரே உயிரிழந்துள்ளார். அத்தோடு, மற்றுமொரு உத்தியோகத்தர் இதன்போது தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

இந்நிலையில், உயிரிழந்தவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவில் மிக நீண்டகாலமாகவே காட்டு யானைகளின் தாக்குதல்களும் அட்டகாசங்களும் அதிகரித்துள்ளதுடன், காட்டு யானைகளால் அப்பகுதி மக்களின் வீடுகள், பயிரினங்கள் சேதமடைந்து மட்டுமன்றி, அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறபடியாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## பிரதம அதிதியாக...

தமிழர் பெருவிழாவில் பிரதம அதிதியாக கலந்துகொள்வதற்காகவே மனோ கணேசன் எம்.பி. கனடாவுக்கு பயணமானாரென, அவரது அலுவலகம் நேற்று தெரிவித்தது.

## இலங்கைக்கு 850,000 மில்...

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் வழக்கு விசாரணையின் தற்போதைய நிலை என்னவென்று பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த கேள்விக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் சபையில் மேலும் தெரிவித்த போது,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பாக சிங்கப்பூர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததன் பின்னர், கப்பலின் காப்புறுதி நிறுவனம் வழக்கு விசாரணை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இலங்கை தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வலியுறுத்தியது.

அதற்கிணங்க, சட்ட மாஅதிபர் உட்பட உரிய விடயதானத்துக்கு பொறுப்பான தரப்பினர்களை உள்ளிடக்கிய ஒன்பது பேர் கடந்த மாதம் சிங்கப்பூருக்கு சென்று, கப்பலின் காப்புறுதி நிறுவனத்துடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து, கப்பலின் காப்புறுதி நிறுவனம் 8 இலட்சத்து 50 ஆயிரம் மில்லியன் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது.

## பாதாளக் குழுக்களுக்கு...

இந்த நடவடிக்கைகள் அதிரடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இலங்கையானது, மிகக் கவலை தரும் வகையில் அதிகளவு துப்பாக்கி கலாசாரங்களையும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களையும் எதிர்கொண்டுள்ளதாலும் அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெறுவதாலும் திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

இந்த வருடம் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். மன்னார், அடம்பனில் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். 46 மற்றும் 53 வயதுடைய இருவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, இவர்களை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக போதைப்பொருள் மற்றும் பாதாள உலக குற்றங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தேசபந்து தென்னகோன் தலைமையில் பொலிஸ் மாஅதிபர் குழுவொன்றை நியமித்திருந்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இதற்கான அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தார்.

## இலங்கையில் விரைவில் ...

வழங்கும் முறையை உருவாக்கியிருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி பொருளாதார நிலைய வளாகத்தில் அமைந்துள்ள எச் 18 என்று பெயரிடப்பட்டுள்ள கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையமொன்றை திறந்துவைத்து உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக கொழும்பு மற்றும் புறநகர் பகுதி மக்களுக்கு இந்த வசதி வழங்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சும் கடற்றொழில்கூட்டுத்தாபனமும்பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள போதிலும், தொலைநோக்கு சிந்தனையுடன் முன்னெடுத்துச் செல்ல முயற்சிப்பதாகவும், இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தோர்...

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குகள் தொடர்பான விவாதத்தின் போது, எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி, ஐ.எஸ். அமைப்பில் பயிற்சிகள் பெற்ற

25 பேர் நாட்டுக்குள் இருக்கிறார்களா? என்ற விடயம் தொடர்பாக கேள்வியெழுப்பினார்.

இதனையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இவ்விடயம் தொடர்பாக ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையிலேயே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவால் இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி பாராளுமன்ற அமர்வில் நிகழ்த்தப்பட்ட உரையின் உண்மைத்தன்மை தொடர்பாக முழுமையான விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் கடந்த காலங்களை போன்று உரிய தகவல் கிடைத்தும் உடனடி நடவடிக்கைகள் எடுக்காமையால் ஏற்பட்ட விபரீதங்கள் தொடர்பாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் இக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## வெலிக்கடை சிறையில்....

ராஜகுமாரியின் மரணத்துக்கு காரணமான அனைவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சி.ஐ.டியினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் ஒக்டோபர் 27ஆம் திகதி நடைபெறுமென தெரிவித்த நீதவான், விசாரணை அறிக்கையை அன்று சமர்ப்பிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளார்.

பதுளையை சேர்ந்த ராஜகுமாரி, இவர் வேலை பார்த்த வீட்டின் உரிமையாளரின் முறைப்பாட்டை தொடர்ந்து கடந்த மே 11ஆம் திகதி கைது செய்யப்பட்டார். பின்னர் வெலிக்கடை சிறையில் உயிரிழந்தார். அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக, உறவினர்கள் தெரிவித்தனர்.

## உணவகம் ஒன்றில் புழுக்கள் ...

அதனை உட்கொள்ள தயாராகிய போது, அந்த உணவிலிருந்து புழுக்கள் வெளிப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக வெள்ளவத்தை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த உணவகம் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென, வெள்ளவத்தை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது.

## இரத்ததானத்தை ...

இரத்ததானம் செய்பவரின் இரத்தம் கூறுகளாக பிரிக்கப்படுவதால், இரத்தம் பெறுபவர்களின் உயிருக்கு தேவையற்ற ஆபத்துகளை ஏற்படுத்த வேண்டாமென்று தேசிய இரத்த மாற்றுச் சேவை தீர்மானித்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதற்கமைய டாட்டு எனப்படும் பச்சை குத்துதல், தோல் குத்துதல் போன்ற செயல்களை செய்பவர்கள், ஒரு வருடத்துக்கு இரத்ததானம் செய்பவர்களாக தொடர்புகொள்ளப்பட மாட்டார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## நீர்த்தேக்கங்களில்...

குறைவடைந்துள்ளதால், நீர்மின் உற்பத்தித்திறன் தேசிய தேவையில் 15 சதவீதமாக குறைந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் தேவையில் 65 சதவீதத்துக்கு அனல் மின்சாரத்தையே சார்ந்துள்ளதுடன், இதன் விளைவாக உற்பத்தி செலவு 800 மில்லியன் ரூபாவிலிருந்து 1,200 மில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் போதியளவான மழை வீழ்ச்சி பதிவாகியிருந்ததுடன், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் உயர்வடைந்தது.

சில சமயங்களில் 70 சதவீத தேவைக்கு நீர் மின்சாரத்தை நம்பியிருந்ததாகவும் தற்போது அது 15 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக, உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய மின்சார சபை ஆரம்பித்துள்ளதாகவும், அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கிழக்கின் குரல்



## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்- பொலிஸ் மா அதிபர் இடையில் விசேட கலந்துரையாடல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் திட்டமிட்ட சில கும்பல்களினால் தோற்றுவிக்கப்படும் அத்துமீறல்கள், குற்றச்செயல்கள் மற்றும் அதற்கான தரவுகள் தொடர்பில் நேற்றைய தினம் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்ன மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோர் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவ.சந்திரகாந்தனை சந்தித்து கலந்துரையாடினர்.



இதன்போது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு, மாதவனை போன்ற பிரதேசங்களில் தொடர்ச்சியாக ஏற்படுகின்ற அத்துமீறல்கள் அதனுடன் தொடர்புபட்ட பிணக்குகள் போன்றவற்றை சரி செய்யும் முகமாக பொலிஸ் சோதனைச் சாவடியை மிக விரைவில் அமைப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அதனுடன் இணைந்ததாக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடம்பெறக்கூடிய சட்டவிரோத மதுபான உற்பத்தி, விற்பனை போதைப்பொருள் கடத்தல் அவற்றுடன் தொடர்புபட்ட குற்றச்செயல்கள் போன்றவற்றை தடுப்பது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் மா அதிபர் தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைவது குறைவாக இருக்கின்றது. அவர்கள் தங்களது சமூகத்துக்கு சேவையாற்றும் வண்ணமாக பொலிஸ் சேவையில் இணைந்து பணியாற்ற வேண்டுமெனவும் அதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.



இந்து சுமங்கலிப் பெண்கள் அனுஷ்டித்து வரும் வரலட்சுமி விரதமானது நேற்று காரைதீவு ஸ்ரீ நாராயணன் சுவாமி ஆலயத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். (படங்கள் காரைதீவு குறூப் நிருபர்)

## ரூ.14 இலட்சம் பெறுமதியான தங்கநகைகள் கொள்ளை

*வாச்சிக்குடா விசேட நிருபர்*

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னப்பனங்காடு பிரதேச வீடொன்றில் தாலி உள்ளிட்ட சுமார் 14 இலட்சம் ரூபா பெறுமதியான 9 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளரால் அக்கரைப்பற்று பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த போது மேல் தளத்தின் கதவு வழியாக உள்நுழைந்த இரு திருடர்கள் பெண்ணின் கழுத்திலிருந்த தாலியை வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் வாக்குமூலத்தை பதிவு செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவில் அண்மைக்காலமாக கொள்ளை சம்பவங்கள், போதைப்பொருள் கடத்தல் போன்றன அதிகரித்துவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

## மட்டு. சிறைச்சாலை கைதி திடீர் மரணம்

*மண்டூர் தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட சிறைக்கைதியொருவர் திடீரென உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

களுவங்கேணி வந்தாறுமூலை பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான (62) வயதுடைய வீரக்குட்டி தவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தனது மனைவியை கத்தியினால் குத்திக்கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவினால் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தரவுக்கமைய சம்பவ இடத்துக்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்குட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

## மின் நிலுவைக் கட்டணத்தை செலுத்துமாறு பாவனையாளர்களுக்கு அறிவித்தல்

*ஒலுவில் விசேட நிருபர்*

கல்முனைப் பிராந்திய மின் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் மாதாந்த மின் கட்டணத்தை செலுத்த தவறிய மின் பாவனையாளர்கள் மின் நிலுவைக் கட்டணத்தை செலுத்துமாறு, கல்முனைப் பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணம் நிலுவையிலுள்ள சம்மாந்துறை, கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை, காரைதீவு, நிந்தவூர், மாளிகைக்காடு, ஒலுவில், பாலமுனை, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச மின் பாவனையாளருக்கே இவ்வறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஒரு மாதத்துக்கு மேலான கட்டணத்தை கொண்டிருப்பவர்களின் மின் துண்டிப்பு செய்யப்படவுள்ளதோடு, அவ்வாறு இணைப்பு துண்டிக்கப்படுமிடத்தில் மீள் இணைப்பை ஏற்படுத்துவதற்காக முற்று முழுதான மின் நிலுவைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் மீள் இணைப்புக் கட்டணம் என்பன செலுத்த வேண்டுமெனவும் அவ்வறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்த மின்சாரப் பட்டியலில் காணப்படும் நிலுவையை உடனடியாக செலுத்தி மின் துண்டிப்பை தவிர்த்துக் கொள்ளுமாறு மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## கல்முனை வலயத்தில் இரு கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு புதிய நியமனம்



*காரைதீவு குறூப் நிருபர்*

கல்முனை வலயத்தில் இரு இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கல்முனை கோட்டத்தின் கோட்டக் கல்விப் பணிப்பாளராக உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.றியால் நியமிக்கப்பட்டார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் புதிய அதிபராக முன்னாள் கல்முனை கோட்டக்கல்விப்பணிப்பாளர் நஸ்மியா சனூஸ் நியமிக்கப்பட்டார்.

இருவருக்குமான நியமனக்கடிதங்களை கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம் எஸ் சஹதுல் நஜீம் வழங்கி வைத்தார். இவர் நேற்று அவர்கள் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டனர்.

## போரதீவுப்பற்றில் தொடரும் மனிதன்-யானை மோதல்

*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

போரதீவுப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் மிக நீண்ட காலமாக காட்டு யானைகளின் தாக்குதல்களும், அட்டகாசங்களும் அதிகரித்த வண்ணமாகவே உள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



இந்நிலையில் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட வேத்துக்சேனைக் கிராமத்துக்குள் இரவு வேளைகளில் காட்டுயானைகள் நுழைந்து அட்டகாசம் புரிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து வெல்லாவெளி வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள காரியாலயத்துக்கு கிராம மக்கள் தெரியப்படுத்தியதையடுத்து அங்கு விரைந்த உத்தியோகத்தர்கள் யானைகளைக் அப்புறப்படுத்துவதற்கு முயன்றுள்ளனர். இதன்போது காட்டு யானை உத்தியோகத்தர் ஒருவரை தாக்கியதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார். அவருடன் வந்த மற்ற உத்தியோகத்தர் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

இச்சம்பவத்தில் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் வெல்லாவெளி காரியாலயத்தில் பணிபுரிந்த நுவரெலியாவைச் சேர்ந்த 30 வயதுடைய செல்வராஜ் சிறிதரன் எனும் உத்தியோகஸ்தர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக காட்டுயானைகளின் அட்டகாசங்களும், தொல்லைகளும் அதிகரித்துவருவதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## காரைதீவு- மண்டூர் திருத்தல பாதயாத்திரை

*காரைதீவு குறூப் நிருபர்*

காரைதீவிலிருந்து மண்டூர் முருகன் ஆலயத்துக்கான திருத்தல பாதயாத்திரை இந்து மத எழுச்சியுடன் இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை சிறப்பாக நடைபெறவுள்ளது. காரைதீவு அடியார்களுடன் அட்டப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை ஆகிய கிராம மக்களும் கலந்துகொள்வர்.

முருகப்பெருமான் திருவுருவப் படங்கள் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஏழு உழவு இயந்திரங்கள் முன்னதாக செல்ல, அடியார்கள் "அரோகரா" கோஷம் எழுப்ப, நந்திக்கொடி தாங்கி, பஜனைப் பாடல்கள் சகிதம் பாதயாத்திரை சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் வரை அடியார்கள் வரிசையில் செல்வது வழமை.

## இந்து ஆலயங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம்

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள இந்து ஆலயங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த யுத்தகால சூழ்நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனால் பின்தங்கிய பகுதிகளில் கைவிடப்பட்ட கவனிப்பாரற்ற அழிவுற்ற நிலையில் உள்ள ஆலயங்களை மீள் புனரமைத்து வழிபாட்டுக்குரிய வகையில் அவற்றை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

கெவிளியாமடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு பராமரிப்பு செய்வதற்கான பொறுப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் பேராலய நிர்வாகத்துக்கும், புனானை இலக்குபுல் விநாயகர் ஆலயம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு பராமரிப்பு செய்வதற்கான பொறுப்பு களுதாவளை ஸ்ரீ சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்துக்கும், கச்சக்கொடி சுவாமிமலை ஸ்ரீ பிள்ளையார் முருகன் ஆலயம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு பராமரிப்பு பொறுப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கும், மாகூப்பை, வெலிக்கந்தை வெள்ளிமலை பிள்ளையார் ஆலயம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு பராமரிப்பு செய்வதற்கான பொறுப்பு சந்திவெளி புதுப்பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினருக்கும் மாவட்ட அரசாங்க அதிபரினால் உத்தியோகபூர்வமாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு விசேட பயிற்சி



*பெரியபோரதீவு தினகரன் நிருபர்*

விவசாயிகள் பெரும்போகத்தில் எதிர்நோக்கவுள்ள சவால்களுக்கு தீர்வு காணும் பொருட்டு விசேட பயிற்சியொன்று வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளரின் அனுசரணையுடனும், மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளரின் வழிகாட்டுதலுடனும் எதிர்வரும் பெரும்போகத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு தீர்வு காணும் நோக்கில் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

முன்பயிற்சி வகுப்பு *Pre seasonal training class* பிரிவுக்குரிய நெற்செய்கை விவசாயிகளை ஒருங்கிணைத்து பழுகாமம் விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்திறில் பயிற்சி வகுப்பு வியாழக்கிழமை நடாத்தப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் மட்டக்களப்பு தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ்.சித்திரவேல்., மாகாண விவசாய திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் நியாஸ், விவசாய போதானசிரியர், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டு விவசாயிகளுக்குரிய ஆலோசனைகளையும், விளக்கங்களையும் வழங்கினர். இதன்போது கலந்து கொண்ட விவசாயிகளுக்கு எதிர்வரும் பெரும்போகத்தில் நெற்செய்கை விவசாயிகள் எதிர்நோக்கவுள்ள சவால்கள் பலவற்றுக்கு அதிகாரிகள் உகந்த ஆலோசனைகளயும், விளக்கங்களையும் வழங்கினர்.

## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி புதிய அதிபராக நஸ்மியா சனூஸ் நியமனம்

*கல்முனை மத்திய தினகரன் நிருபர்*

கல்முனை கல்வி வலயத்துக்குட்பட்ட கமு/ கமு/ மஹ்மூத் மகளிர் கல்லூரியின் (தேசிய பாடசாலை) புதிய அதிபராக இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரி நஸ்மியா சனூஸ் கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் கல்முனை வலய உதவி கல்வி பணிப்பாளர் மற்றும் கோட்டக்கல்வி பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்து மிக திறம்பட செயலாற்றிய அதிபராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



# வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் 25 ஆண்டுகள் சேவையாற்றிய பா. சண்முகத்துக்கு பாராட்டுவிழா

சங்கரத்தை, வட்டுக்கோட்டை மக்களின் நன்மதிப்பை வென்ற. திரு. பா. சண்முகம் அவர்களின் கல்வி, சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி கௌரவிக்கும் வகையில் சங்கரத்தைக் கிராம மக்களும் பழைய மாணவர்களும் இணைந்து பாராட்டு விழாவொன்றை இன்று (26) ஏற்பாடு செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், பிரதி அதிபராகவும் இவர் சேவையாற்றியுள்ளார். மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதில் பிரதான பங்கு வகித்தவர். மாணவர்கள் பொதுவாகப் பாகற்காயாகக் கருதும் கணித பாடத்தைச் சக்கரைப் பாகுபோல இதமாக்கிக் கற்பிக்கும் நுட்பம் கொண்டவர். இதனாலேயே மாணவர்கள் இவரின் பால் இலகுவாக ஈர்க்கப்பட்டனர். கற்பித்தலில் மட்டுமன்றி மாணவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, இயல்பாகவும் இலகுவாகவும் அவற்றைத் தீர்த்துவிடுவதிலும் மாணவர்களை நுட்பமாகக் கையாண்டு வழிநடத்துவதிலும் அவரது திறமை அலாதியானது. இதனாலேயே மாணவர்களின் விருப்பத்துக்கும் பெற்றோர்களின் நம்பிக்கைக்கும் உரியவராக இவர் திகழ்ந்தார். சக ஆசிரியர்களோடும் அதிபரோடும் மட்டுமன்றி பாடசாலைச் சமூகத்தினரோடும் நல்லுறவுகளைக் கட்டியெழுப்பியவராகவும் அவர் விளங்கினார். மேலாதிகாரிகளின் மதிப்பையும் பெற்றிருந்தார். அதேவேளை தனது எண்ணங்களையும் விருப்பங்களையும் உரியவாறு முன்வைத்து அவற்றை நிறைவேற்றிக்கொள்வதில் வல்லவராகவும் இருந்தார்.



வட்டு. மத்திய கல்லூரியாகத் திகழும் பாடசாலை 2000ஆம் ஆண்டு வரை திருஞானசம்பந்த வித்தியாசாலை என்ற பெயருடனேயே விளங்கி வந்தது. தரம் 2 பாடசாலையாகவிருந்த இப்பாடசாலையை க.பொ.த (உ/த) வகுப்புகளை நடாத்தும் பாடசாலையாக தரம் உயர்த்தி, வட்டு. மத்திய கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யவும் காரணமாகவிருந்தார். கல்லூரி அதிபரும் வட்டு. இந்து வாலிபர் சங்கமும் கல்லூரிச் சமூகமும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அந்நாட்களில் அதிபரின் வலது கரமாக செயற்பட்டதோடு வட்டு. இந்து வாலிபர் சங்கம், கல்லூரிச் சமூகம் என்பவற்றோடு இணக்கமான உறவினைப் பேணினார். அதுமட்டுமன்றி விளையாட்டுத்துறை உள்ளிட்ட இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் கல்வி அடைவுகளிலும் பாடசாலை தனித்துவத்தோடு மிளிர்ந்தது. பாடசாலைக்கான கட்டடங்கள் உள்ளிட்ட பௌதீக வளத் தேவைகள் பெரும்பாலும் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

சங்கரத்தை கரந்தை குளவத்தை முருகன் கோயிலின் வளர்ச்சியிலும் அவ்வாலயத்தினூடாக முன்னெடுக்கப்படும் ஆன்மீகச் செயற்பாடுகளிலும் அவர் பிரதானமாகப் பங்கெடுத்து வருகின்றார். ஆலயத்தில் அறநெறிப் பாடசாலையொன்றை நிறுவுவதிலும் செயற்படுத்துவதிலும் கிராமத்தவர்களோடு இணைந்து உழைத்தார். அதன் மூலம் கிராம இளைய சமூகத்தினர் மத்தியில் ஆன்மீக அறிவைப் பரப்புவதிலும் விழுமியப் பண்புகளை மேம்படுத்துவதிலும் பங்களிக்கமுடிந்தது.

## வடக்கின் உதயம்

# வடக்கு அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கம் பூரண ஆதரவு

**யாழ். விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் முதுநிலைச் செயலாளர் திரு ஒலிவர் பிரஸ் (OLIVIER PRAZ) தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து, வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை இக்கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் கல்வி செயற்பாடுகள், விவசாய நடவடிக்கைகள் மற்றும் வடமாகாண மக்களின் பொதுவான உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டது.



மேலும் வடமாகாணத்தில் தற்போது தாம் முன்னெடுத்துவரும் செயற்பாடுகள் குறித்து சுவிஸ் தூதரகத்தின் பிரதித் தலைவருக்கு ஆளுநருக்கு விளக்கியிருந்தார்.

# வீதியில் மயங்கி விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

தோட்ட வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பியவர் , வீதியில் மயங்கி விழுந்து, நேற்று முன்தினம் வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஏழாலை பகுதியைச் சேர்ந்த இராசரத்தினம் நாகேந்திரன் (வயது 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளளது. பிரேத பரிசோதனைக்கு பின்னரே மரணத்துக்கான காரணம் தெரியவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்



அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும்நிர்வாகத் தெரிவும் அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாக பிரதமர் தினேஷ் குணவர்தன கலந்து சிறப்பித்தார். சிறப்பு நிகழ்வாக 15 தொடக்கம் 25 வருடங்கள் சேவையாற்றிய திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. புதிய நிர்வாகத் தெரிவின் போது திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக சி.தவமலர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சாவகச்சேரி விசேட நிருபர்)

# பிரித்தானிய தமிழ் பல் வைத்திய சங்கம் யாழ். போதனாவுக்கு நன்கொடை



**யாழ். விசேட நிருபர்**

பிரித்தானிய தமிழ் பல் வைத்திய சங்கம் (BTDA The British Tamil Dental Association) வட மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் பல் சிகிச்சை நிலையங்களுக்கு தேவையான ஒரு தொகுதி பொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நன்கொடைகளை வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

பல் வைத்திய குழுவினர் கடந்த ஒருவாரகாலமாக வடக்கிலுள்ள பிரதேசங்கள் சில பாடசாலைகளுக்கும், வைத்தியசாலைகளுக்கும், முதியோர் மற்றும் சிறுவர் இல்லங்களுக்கு விஜயம் மேற்கொண்டு தற்கால நிலைமை தொடர்பாக கலந்தாலோசித்ததோடு தேவையானவர்களுக்கு சில பற் சிகிச்சைகளையும் வழங்கியிருந்தனர்.

# வசாவிளானில் 20 பவுண் நகைகள் திருட்டு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் வசாவிளான் பகுதியில் வீடொன்றினுள் நுழைந்த திருடர்கள் 20 பவுண் நகைகளை திருடி சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வங்கியொன்றுக்கு சென்ற சமயம், வீட்டினுள் நுழைந்த திருடர்கள் வீட்டிலிருந்த 20 பவுண் நகைகளை திருடி சென்றுள்ளனர். அதேவேளை வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமரா உள்ளிட்ட அவற்றின் தொகுதிகளையும் பிடுங்கி சென்றுள்ளனர்.

திருடப்பட்ட நகைகளின் பெறுமதி சுமார் 20 இலட்சம் ரூபா எனவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

# பண்டாரவன்னியனின் 220ஆம் ஆவது வெற்றிவிழா

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த வெள்ளையரின் கோட்டையை போரிட்டு வெற்றிகொண்ட வன்னியின் இறுதி மன்னன் பண்டார வன்னியனின் 220ஆம் ஆண்டு வெற்றிவிழா முல்லைத்தீவு நகரில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் தலைமையில் பண்டாரவன்னியனின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து கௌரவித்தனர். மேலும் இந்நிகழ்வில் முன்னாள் கரைத்துறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், சமூகசெயற்பாட்டாளர்களான இ. ஜெரோன்சன் கி.சிவகுரு, பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



## மலைச்சாரல்





பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மன்றத்தின் 50 ஆவது பொன் விழாவை முன்னிட்டு நேற்று 25 வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் சுமார் 500ற்கும் மேற்பட்ட பெண்கள் பங்குபற்றிய வரலக்ஷ்மி பூஜை சிவ சிறீ பாலகுகேஸ்வர குருக்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம். (படம்: ஊவா சுழற்சி நிருபர்)

# மலையகத்தில் தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள்

தமிழ் நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள் கேகாலை மாவட்டத்திலும், கொட்டகலை, ஹற்றன் ஆகிய பகுதிகளிலும் நடைபெறவுள்ளது.

எட்டியாந்தோட்டை ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு எலிஸ்டன் தோட்ட சிவலிங்க பிரதிஷ்டையிலும், பிற்பகல் 2.00 மணிக்கு எட்டியாந்தோட்டைசாந்தமரியால்கல்லூரியிலும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கனேபல்ல ஸ்ரீதுர்க்க அறநெறி பாடசாலையிலும், புதன்கிழமை (30) காலை 9.00 மணிக்கு அரநாயக தமிழ் ஆரம்ப பாடசாலையிலும் வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பூணுகல ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலும், எதிர்வரும் செப்டெம்பர் 01 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொட்டகலை அறநெறி பாடசாலையிலும், அதனை தொடர்ந்து 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஹற்றன், ஓம் ஸ்ரீ தேவி கருமாரியம்மன் தேவஸ்தானம், பன்மூர்பதியிலும், 3ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வரக்கபொல ஸ்ரீ காளி காம்பாள் ஆலயத்திலும், பிற்பகல் 2.00 மணிக்கு அவிசாவளை அறநெறி பாடசாலையிலும் மற்றும் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ரூவான் வெல்ல அறநெறி பாடசாலையிலும் சுவாமிகளின் ஆன்மீக அருளுரைகள் நடைபெறும்.

தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் சுவாமி காலை, மாலை நடைபெறும் புனித நிகழ்வுகளில் கலந்து கொண்டு இறையருள் பெறுவதோடு சுவாமிகளின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

# சிங்கராஜவனத்தின் எல்லைகள் 21000 ஹெக்டயராக விஸ்தரிப்பு

இலங்கையில் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமான சிங்கராஜ வனத்தின் எல்லைப் பகுதி இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து களுத்துறை மாவட்டம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ நிறுவன ஏற்பாடுகளுக்கிணங்க இதற்கான வரைபடம் மற்றும் நில அளவை மற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட செயலக தகவல் குறிப்புக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கிணங்க தற்போது சிங்கராஜ வனத்தின் 11187 ஹெக்டயர் வனப்பகுதி மேலும் 10,000 ஹெக்டேயரால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை இரத்தினபுரி, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களின் எல்லைகளே சிங்கராஜ வனத்தின் எல்லைகளாக காணப்பட்டன. எதிர்காலத்தில் அடர்ந்த காடுகளையுடைய களுத்துறை மாவட்டத்தின் பதுரளிய மொரவக்க, ரேனகந்த ஆகிய பிரதேசங்களும் சிங்கராஜா வனத்துடன் இணைகின்றன. இவ்விடயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லிந்துலை சம்பவம்; குழந்தையின் சடலமும் மீட்பு

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை லோகி தோட்டம் பகுதியிலுள்ள குளத்திலிருந்து தாய் மற்றும் ஒரு வயது குழந்தை ஆகியோரின் சடலங்கள் புதன்கிழமை (23) மீட்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, தனது கணவர் மற்றும் கணவரின் குடும்ப உறுப்பினர்களால் தான் துன்புறுத்தப்பட்டு வந்துள்ளதாக மூன்று பக்கங்களை கொண்ட கடிதமொன்றையும் அப்பெண் எழுதி வைத்துள்ளார். அக்கடிதம், திருமண சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை தனது வீட்டுக்கு அருகிலுள்ள குளத்தின் அருகில் வைத்து விட்டு குளத்தில் பாய்ந்திருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். 26 வயதுடைய தாய் தயானி மற்றும் ஒரு வயது மகள் பிரதிக்ஸா ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். இதில் முதலில் தாயின் சடலம் மீட்கப்பட்டதுடன் நேற்று குழந்தையின் சடலமும் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைக்காக தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதோடு நுவரெலியா மாவட்ட நீதவான் தலைமையில் மரண விசாரனைகள் நடைபெற்று சடலங்கள் சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை விந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது .

# உணவகங்களில் திடீர் சோதனை

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

பலாங்கொடை நகர மற்றும் புறநகர் கிராமப்பகுதிகளில் உணவகங்கள் மீது திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கூட்டாக சென்று இவற்றை பரிசோதித்து வருகின்றனர். பெரிய, சிறிய என வித்தியாசமின்றி அனைத்து உணவகங்களும் இவ்வாறு பயிற்சிக்கப்படுவதாக பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டின் பின்னர் அதிகாரிகள் தமது சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனனர். பலாங்கொடை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் பல உணவகங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் பலவற்றில் பொதுமக்களின் பாவனைக்குதவாத பல உ ணவுப்பொருட்களும் காலாவதியான உணவு பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டு அவை அழிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். முதலாவது முறையாக பரீட்சிக்கப்படும் போது இனங்காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பில் உணவக வியாபாரிகள் எச்சரிக்கை செய்யப்படுவதாகவும் இந்நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றால் இவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிற்துறையை மேம்படுத்தும்

# ஜனாதிபதியின் அர்ப்பணிப்பிற்கு இலங்கை இரத்தினக்கல், ஆபரண சங்கம் வரவேற்பு

இலங்கை அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிற்துறையின் உயர் அமைப்பான இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் (SLGJA) ஆனது, தேசிய பொருளாதாரத்தில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் துறையின் முக்கிய பங்கு தொடர்பில், அண்மையில் அதற்கு அங்கீகாரம் அளித்தமைக்காக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு தமது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.



இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கமானது, இரத்தினக்கல் மற்றும் ஆபரண ஏற்றுமதி மற்றும் மீள்ஏற்றுமதியை மேம்படுத்துவது தொடர்பான, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழிற்துறையின் முக்கியத்துவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளமையானது, இச்சங்கத்தின் குரலுடன் இணைந்து வலுவாக எதிரொலிக்கிறது.

இத் தொழிற்துறையின் வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கு உகந்த சூழலை மேம்படுத்துவதில் அரசாங்கம் கவனம் செலுத்துகின்றமையை சங்கம் மிகவும் வரவேற்கிறது.

ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்புக்கு பதிலளிக்கும் வகையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கான தனது ஆர்வத்தை இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கம் உறுதிப்படுத்துகிறது.

இது தொடர்பில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தலைவர் அஜ்வார்ட் டீன் கருத்து வெளியிடுகையில், "இத் தொழிற்துறையின் உச்ச அமைப்பு எனும் வகையில், எமது தொழிற்துறையின் வளர்ச்சி, புத்தாக்கம், அதன் உலகளாவிய அங்கீகாரத்தை அடைவதற்காக, அரசாங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்களுடன் இணைந்து மும்முரமாக ஒத்துழைக்க நாம் எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் ஒன்றிணைந்து, எமது தேசத்தை வெற்றியின் புதிய உயரங்களுக்கு கொண்டு செல்வதற்கான சூழலை எம்மால் உருவாக்க முடியும்." என்றார்.

## புதுப்பிக்கப்பட்ட Mobil Delvac எஞ்ஜின் ஒயில்

மேம்பட்ட கடின பணியை மேற்கொள்ளும் உராய்வு நீக்கி எண்ணெய் வகைகளின் பட்டியலில் முன்னணியில் உள்ள புகழ்பெற்ற Mobil Delvac (மொபில் டெல்வக்) ஆனது, தற்போது மேம்படுத்தப்பட்ட செயற்றிறன் மற்றும் புத்தம் புதிய தோற்றத்துடன், அதன் எஞ்சின் ஒயில் வரிசையை மீள அறிமுகப்படுத்துவதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த மீள் அறிமுகத்தில், குறிப்பாக டீசல் எஞ்சின்களுக்காக வடிவமைக்கப்பட்ட, Delvac Modern மற்றும் Delvac Legend ஆகிய இரண்டு ஒப்பற்ற தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.




மொபில் Mobil Delvac Modern ஆனது செயற்கைத் தொழில்நுட்பத்துடனும் Mobil Delvac Legend ஆனது பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட எஞ்சின் ஒயில் ஆகவும் வடிவமைக்கப்பட்டு டீசல் எஞ்சின்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்டது. டீசல் எஞ்சின் ஒயில்களுக்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்ட இலங்கையில் உள்ள குறிப்பிடும்படியான சில வர்த்தகநாமங்களில் ஒன்று எனும் பெயர் பெற்ற Mobil Delvac ஆனது, டீசல் எஞ்சின்களின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான, பரந்த அளவிலான தயாரிப்புகளை வழங்குவதில் பெருமை கொள்கிறது.

Mobil இன் முதன்மையான டீசல் எஞ்சின் ஒயில் தயாரிப்பான Delvac 1 ஆனது, இலங்கையில் கிடைக்கின்ற பிரீமியம் வகை செயற்கை டீசல் எஞ்சின் ஒயில் ஆகும். இது எஞ்சினிலிருந்து வெளியாகும் புகைகளை கட்டுப்படுத்தும் தொகுதிகள் உள்ளிட்ட புதிய மற்றும் பழைய எஞ்சின் வகைகளில், ஒப்பற்ற செயற்றிறனை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 22ஆவது SLIM Brand Excellence விருதுகள் ஆரம்பம்

SLIM Brand Excellence கடந்த பல வருடங்களாக வெற்றிகரமான சந்தைப்படுத்தல் முயற்சிகள் மற்றும் குறிப்பிடத்தக்க வர்த்தகநாம கதைகளுக்கான அங்கீகாரத்தை வழங்கி, நாட்டின் உயர்ந்த சாதனைகளைக் கொண்டாடி வருகிறது. SLIM அண்மையில் இந்த நன்மதிப்புக்குரிய விருது விழாவின் புத்தம் புதிய தொகுப்பை, 'Logic Behind the Magic' என்ற கருப்பொருளின் கீழ் இடம்பெற்ற ஒரு பிரமாண்டமான வெளியீட்டு விழாவில் அறிமுகப்படுத்தியது.வலுவான வர்த்தகநாமங்களை உருவாக்குவதில் மூலோபாயங்களுடன், புத்தாக்கத்தை இணைப்பதன் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் இந்த கருப்பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



SLIM இன் தலைவர் சிந்தக பெரேரா இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், 'இந்த சகாப்தத்தில், திறமையான வர்த்தகநாம முகாமைத்துவமானது பகுப்பாய்வுகள் நம்பகத்தன்மையை சந்திக்கும் தரவு நுண்ணறிவு மற்றும் விசுவாசத்திற்கான உணர்வுபூர்வமான ஒத்திசைவினை சமநிலைப்படுத்துகிறது. மாற்றங்களுக்கு மத்தியில், திறமையான முகாமைத்துவம் என்பது தரத்தை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

ஒரு நிலையான, உயர்தர நற்பெயர் முக்கியமானதாகும். SLIM Brand Excellence ஆனது உலகளாவிய ரீதியில் எமது வர்த்தகநாமங்களை மேம்படுத்துகிறது.நம்பிக்கையுடன், நாங்கள்எங்கள் வர்த்தகநாமங்களை முன்னெடுத்துச் செல்வோம். இதன் மூலம் உள்நாட்டினர் குறிப்பிடத்தக்க மைல்கற்களை அடைவதைக் காண்போம்,"என்றார்.

SLIM இன் நிகழ்வுகள் மற்றும் நிலைபேறாண்மை திட்டங்களின் துணைத் தலைவர் கயான் பெரேரா தெரிவிக்கையில், "இன்றைய நிலையற்ற சூழலில், வெற்றிகரமான வர்த்தகநாம முகாமைத்துவமானது, வர்த்தகநாமத்தின் நீண்டகால ஆரோக்கியம் மற்றும் நற்பெயரைப் பேணி, செயல்திறன் மிக்க மற்றும் சவால்களையும் சிறந்த முறையில் எதிர்கொள்கின்றது. நெருக்கடியான காலப்பகுதியில் இருந்து மீளும் வர்த்தகநாமங்கள் மீளெழுச்சி மற்றும் பொருந்திப் போகும் தன்மையை பிரதிபலித்து வலுவாக வெளிப்படும். இரண்டு தசாப்தங்களாக, SLIM Brand Excellence ஆனது, நீடித்த வணிக வெற்றிக்காக முக்கியமான புலனாகாத சொத்துக்களை வர்த்தகநாம தொகுதிகளை போஷித்து, தரத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது," என்றார்.

## சேவையை மேலும் வலுவூட்டும் நவலோக மருத்துவமனை குழுமத்தின் Home Care

இலங்கையில் தனியார் சுகாதாரத் துறையில் முன்னோடியாகத் திகழும் நவலோக்க மருத்துவமனை குழுமம், அதன் சிறப்பு, தரம் மற்றும் மனதைக் கவரும் சுகாதார சேவைகளில் ஒரு படி முன்னேறி, தனது Home Care சேவையை விரிவுபடுத்தியுள்ளது.



நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் இந்த தனித்துவமான பராமரிப்பு சேவைத் தொகுப்பில், நோயாளியை குளிப்பாட்டுதல் மற்றும் ஆடை அணிவித்தல் போன்ற அன்றாட நடவடிக்கைகளில் இருந்து சிக்கலான சுகாதார பராமரிப்பு தேவைகள் வரை உள்ளது.

பிரத்யேக சுகாதார பணியாளர்கள் குழுவினரால் NG Feeding, PEG Feeding மற்றும் Tracheostomy பராமரிப்பு உள்ளிட்ட சிறப்பு சேவைகளை வழங்குகிறது, சிறப்பு சுகாதார தேவைகள் உள்ள அனைத்து நோயாளிகளும் மிக உயர்ந்த தரமான கவனிப்பைப் பெறுவதை இந்த Home Care சேவை உறுதிசெய்கிறது.

"நவலோக்க மருத்துவமனைகள் குழுமமாகிய நாங்கள் இலங்கையிலுள்ள அனைவருக்கும் தனித்துவமான மற்றும் புத்தாக்கமான சேவைகளை வழங்குவதில் பெருமை கொள்கிறோம் மற்றும் விதிவிலக்கான நோயாளர் பராமரிப்பை வழங்குகிறோம். எங்கள் ஊழியர்கள் வாரத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணிநேரமும் நோயாளிகளை மையமாகக் கொண்டு, அவர்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடிகிறது. குறிப்பாக எந்த அவசர சேவைகளுக்கும், மருத்துவ ஆலோசனை அல்லது மருத்துவ பரிசோதனைகளுக்கு மருத்துவமனையை நேரடியாக தொடர்பு கொள்ளலாம் ." என நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் தலைவர் கலாநிதி ஜயந்த தர்மதாச தெரிவித்தார்.

# 2023 இன் முதல் அரை ஆண்டில் மீண்டெழும் கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி 2023ன் முதல் அரை ஆண்டில் வட்டி வருமானத்தில் 150.812 பில்லியன் ரூபா உட்பட மொத்த வருமானமாக 167.668 பில்லியன் ரூபாய்களை பதிவு செய்துள்ளது. இவை ஆரோக்கியமான உயர் மட்ட வளர்ச்சியாக முறையே 40.29 வீதம் மற்றும் 71.15 வீதம் என பதிவாகி உள்ளன. வங்கித்துறைக்கு குறிப்பிடத்தக்க ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்திய காலப் பகுதியில் இந்த வளர்ச்சி வீதங்கள் பதிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியை உள்ளடக்கிய அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்கள் உள்ளடங்களாக கொமர்ஷல் வங்கி குழுமம் கட்டணங்கள் மற்றும் தரகு வருமானங்களையும் சேர்த்து 22.27 வீதம் அதிகரித்து 14.337 பில்லியன்களாக உள்ளது. தேறிய கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் 19.30 வீதத்தால் அதிகரித்து 10.591 பில்லியன்களாகவும் தேறிய ஏனைய செயற்படு வருமானம் 236.42 வீதமாக அதிகரித்து 17.086 பில்லியன்களாகவும் உள்ளது. இது 2022ன் முதல் அரையாண்டு பகுதியில் 12.524 பில்லியன்கள் நட்டமாக இருந்தது.



எவ்வாறேனும் கடந்த ஆறு மாதங்களில் வட்டிச் செலவினங்கள் 65.958 பில்லியன்கள் அல்லது 139.14 வீதமாக அதிகரித்து 113.362 பில்லியன்களாக உள்ளது. குழுமத்தின் தேறிய வட்டி வருமானம் 8.01 வீதத்தால் குறைவடைந்து 37.450 பில்லியன்களாக உள்ளது.

குழுமத்தின் மொத்த செயற்பாட்டு வருமானம் 27.03 வீதத்தால் குறைவடைந்து 50.520 பில்லியன்களாக உள்ளது. ஆனால் தேறிய செயற்பாட்டு வருமானம் மீளாய்வுக்கு உட்பட்ட குறிப்பிட்ட காலப்பகுதியில் 9.69 வீதத்தால் அதிகரித்து 37.309 பில்லியன்களாக உள்ளது. ஆறு மாத காலத்துக்கான குறைபாட்டு ஒதுக்கீடு மற்றும் நட்டங்களுக்காக 13.211 பில்லியன்கள் குழுமத்தால் ஒதுக்கப்பட்ட பின்னராகும். 2022 க்கான குறைபாட்டு கட்டணம் இலங்கை நாணயத்தின் மதிப்பிறக்கம் காரணமாக வெளிநாட்டு நாணய மதிப்பீடு அரச பிணைகளுக்கான கணிசமான மேலதிக ஒதுக்கீட்டை உள்ளடக்கியதாகும். மொத்த செயற்பாட்டு செலவினம் 18.04 வீதத்தால் அதிகரித்து 21.285 பில்லியன்களாக உள்ளது.

## Arpico Insurance நிறுவனத்தின் புதிய தலைவராக ரமல் ஜாசிங்க நியமிப்பு



இலங்கையின் மிகவும் புகழ்பெற்ற ஆயுள் காப்புறுதி நிறுவனமான Arpico Insurance PLC, அதன் நிறைவேற்று அதிகாரமற்ற தலைவராக ரமல் ஜாசிங்கவை நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. இந்த நியமனம் ஜூலை 5, 2023 முதல் அமுலுக்கு வரும் வகையில் வழங்கப்பட்டுள்ளதுடன் பல வருடங்களாக முல்லுல்ல தலைவராக பணியாற்றி ஓய்வு பெற்றதையடுத்து பல வருடங்களாக விவில் பெரேராவு இந்த பதவியை வகித்ததற்கு பிறகு அந்த பதவிக்கு ஜாசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தனது சமீபத்திய பதவி குறித்து கருத்து தெரிவித்த ரமல் ஜாசிங்க, "குழுமத்தின் தலைவர் கலாநிதி சேனயதேஹிகே மற்றும் Richard Pieris & Company PLC ஆகியோருடன் இணைந்து பணியாற்றுவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக எனது சகாவான கலாநிதி கெலும் சேனாநாயக்கவுடன் மீண்டும் பணியாற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நிறுவனம் மேலும் வளர்ச்சிக்கு பெரும் ஆற்றலைக் கொண்டுள்ளது மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் மீதும் அவர்களின் உயர்ந்த திறன்கள் மீதும் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. காப்புறுதித் துறையில் Arpico Insurance நிறுவனத்தை அதிக லாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றும் பார்வைக்கு இது உதவும் என்று நான் நம்புகிறேன். " என தெரிவித்தார்.

## விமர்ச்சையாக நடைபெற்ற SPARK 2023 மாபெரும் இறுதிப் போட்டி

இலங்கையின் வர்த்தக சம்மேளனம் சர்வதேச தொழிலாளர் தாபனம் இணைந்து தொழில்முனைவோர் உலகில் இலங்கை இளைஞர், யுவதிகளின் பிரவேசத்தை மேம்படுத்துகிறது



இலங்கையின் அடுத்த தலைமுறை தொழில்முனைவோருக்கான தேசியப் போட்டியான 'SPARK', உலக தொழில்முனைவோர் தினத்துடன் இணைந்தவாறு, அதன் மாபெரும் இறுதிப்போட்டியை ஒகஸ்ட் 21ஆம் திகதி விமர்சையாக நடாத்தியிருந்தது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்நிகழ்வில், நாட்டின் மிகவும் நம்பிக்கைக்குரிய புத்தாக்க கண்டுபிடிப்பாளர்கள், சிக்கல்களுக்கு தீர்வு வழங்குபவர்கள், சிந்தனையாளர்கள் உள்ளிட்ட, 1524 வயதுடைய படைப்பாளிகள், மாற்றத்தை ஏற்படுத்தும் தங்கள் யோசனைகளை வெளிப்படுத்தி SPARK 2023 விருது விழாவில் போட்டியிட்டனர்.

SPARK 2023 இன் வெற்றியாளரான மிஹிந்தி மினுபமா பண்டார தனது கருத்துகளை வெளியிடுகையில், "SPARK போட்டியில் வெற்றி பெற்றமை எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது. இது என்னைப் போன்ற இளம் தொழில்முனைவோருக்கு, எமது யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளவும், வழிகாட்டல்களைப் பெறவும், திறன்களை மேம்படுத்தவும், அதிகளவில் கற்றுக்கொள்ளவும் ஒரு தளத்தை வழங்குகிறது.

இந்த வாய்ப்பை வழங்கியதற்காக இதன் ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

அத்துடன் இது போன்ற நிகழ்வுகளை எதிர்காலத்திலும் நடத்த வேண்டுமென எதிர்பார்க்கிறேன்." என்றார்.

## பாதுகாப்பான மென்பொருள் மூலமான தரவு மையத்தை மேம்படுத்தும் Softlogic நிறுவனம்




இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் தேசிய கொடுப்பனவு வலையமைப்பாக LankaPay 2002 இல் நிறுவப்பட்டது. மத்திய வங்கிக்கு சொந்தமான LankaPay ஆனது, நாட்டிலுள்ள அனைத்து அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் பிராந்தியத்தில் மிகவும் வெற்றிகரமான அரச, தனியார் கூட்டாண்மைகளில் ஒன்றாக (PPP) கருதப்படுகிறது.

டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், LankaPay தனது தற்போதைய தொழில்நுட்ப மாற்றப் பயணத்தின் ஒரு பகுதியாக அதன் உட்கட்டமைப்பை தொடர்ச்சியாக மேம்படுத்தி வருகிறது.

உயர் கட்டமைப்புக்கான மேம்படுத்தல் மற்றும் மென்பொருள் ரீதியான இடம்பெயர்வு தொடர்பில் கருத்து வெளியிட்ட LankaPay நிறுவனத்தின் IT உதவிப் பொது முகாமையாளர் (AGM) டிலந்த சமரசிங்க தெரிவிக்கையில், "அதிகரித்து வரும் தேவை மற்றும் திறன் மேம்பாட்டிற்கு ஏற்ப பொதுவான அட்டை மற்றும் கட்டண முறையை (Common Card and Payment System CCAPS) மேம்படுத்துவதானது, எமது நிகழ்ச்சி நிரலில் உயர்ந்த இடத்தில் உள்ளது. தேசிய ரீதியிலான கட்டணம் செலுத்தும் மாற்றத்தின் செயற்பாட்டாளர் எனும் வகையில், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் சமீபத்திய உட்கட்டமைப்பு நவீனமயமாக்கல் ஆகியவற்றை பின்பற்றுவதன் மூலம் இத்தொழில்துறையை நாம் வழிநடத்த விரும்புகிறோம். இப்புதிய மென்பொருள் சூழலானது, குறிப்பாக Virtualization, Abstraction, Resource Pooling, Automation ஆகியவற்றின் மூலம் வழக்கமான தரவு மையங்கள் போல் அல்லாது சில குறிப்பிடத்தக்க விதிவிலக்கான அம்சங்களுடன் அதிக விரைவான தன்மையை வழங்குகிறது." என்றார்.


## வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனத்திற்கான தங்க விருதினை வென்றது ஓரியன்ட் பைனான்ஸ் இன் மாற்று நிதி வணிகப் பிரிவு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான ஓரியன்ட் பைனான்ஸ், மதிப்பிற்குரிய "இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித் தொழில் விருதுகளில்" தனது சாதனைகளை பெருமையுடன் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

இந் நிகழ்வில் ஓரியன்ட் மாற்று நிதி வணிகப் பிரிவு (AFBU) இரண்டு மதிப்புமிக்க விருதுகளுடன் கௌரவிக்கப்பட்டுள்ளது. "ஆண்டின் வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனத்திற்கான தங்க விருது, மற்றும் ஆண்டின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கான மெரிட் விருது". இந்த பாராட்டுக்கள் இஸ்லாமிய நிதித்துறையில் சிறந்து விளங்குவதற்கும் புத்தாக்கத்திற்கும் AFBU காண்பிக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

ஓரியன்ட் பைனான்ஸ் மாற்று நிதி வணிகப் பிரிவு, இந்த ஆண்டின் வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனமாக அங்கீகாரம் பெற்றது, அதன் பயணத்தில் ஒரு மைல்க்கல்லாக கருதப்படுகிறது.

# ஆசிய கிண்ணத்திலிருந்து வனிந்து ஹசரங்க விலகல்



லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது பின் தொடை பகுதியில் காயத்திற்கு உள்ளான இலங்கை அணியின் சுழல்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹசரங்க எதிர்வரும் ஆசிய கிண்ண தொடரில் இருந்து விலகியுள்ளார்.

ஜப்னா கிங்ஸ் அணிக்கு எதிரான போட்டியின்போதே ஹசரங்கவின் வலது தொடை பகுதியில் உபாதை ஏற்பட்டது. பி லவ் கண்டி அணித்தலைவரான ஹசரங்க இம்முறை லங்கா பிரீமியர் லீக் தொடரில் அதிக ஓட்டங்கள் மற்றும் விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக சாதனை படைத்தார்.

எனினும் காயம் காரணமாக அவர் தம்புல்லை அவுரா அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் ஆடவில்லை. அவரது பி லவ் கண்டி அணி முதல் முறை சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஆசிய கிண்ணத்தில் நடப்புச் சம்பியனாக களமிறங்கும் இலங்கை அணிக்கு இது இரண்டாவது இழப்பாகும். ஏற்கனவே தோள்பட்டை காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் துஷ்மன்த சமீரவும் தொடரில் இருந்து விலகியள்ளார்.

இந்நிலையில் இந்த இருவருக்கும் பதிலாக கசுன் ராஜித்த மற்றும் துஷான் ஹேமன்த இலங்கை குழாத்தில் இணைக்கப்பட வாய்ப்பு உள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதில் இலங்கை தனது முதல் போட்டியில் எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதி பல்லேகலவில் பங்களாதேஷ் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இலங்கை உத்தேச அணி: தசுன் ஷானக்க (தலைவர்), திமுத் கருணாரத்ன, பத்தும் நிசங்க, குசல் பெரேரா, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம, துஷான் ஹேமன்த, மஹீஷ் தீக்ஷன, துனித் வெல்லாலகே, கசுன் ராஜித்த, லஹிரு குமார, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண.

# கல்முனை சனிமவுன்ட் இறுதி போட்டிக்கு தகுதி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



அம்பாறை மாவட்ட உதைபந்தாட்ட லீக் அனுசரணையில் கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான மர்ஹூம் எம்.ஐ.எம். இக்பால் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண மின்னொளி உதைபந்தாட்ட முதலாவது அரையிறுதிப் போட்டியில் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் இச்சுற்றுப் போட்டியில் கடந்த வியாழக்கிழமை (24) நடைபெற்ற அரையிறுதியில் இரு அணிகளும் தலா ஒரு கோலை பெற்ற நிலையில் பெனால்டி சூட் அவுட் முறையில் சனிமவுன்ட் வெற்றிபெற்றது.

# சம்பியனானது பைனா

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை அல்–நாஜா விளையாட்டுக் கழத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 23 வயதுக்கு உட்பட்ட வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை பைனா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அட்டாளைச்சேனை கோணாவத்தை அல்–நாஜா கடற்கரை மைதானத்தில் கடந்த புதனன்று (23) நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை அல்–நஜா விளையாட்டுக் கழகத்தினை பைனா விளையாட்டுக் கழகம் வெற்றி கொண்டு ரூபா 12 ஆயிரம் பணத் தொகையுடன் வெற்றி கிண்ணத்தையும் தனதாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



கல்நேவ பிரதேச செயலக இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட கிராம சேவகர் மட்டத்திலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி கடந்த 20 ஆம் திகதி கல்நேவ மகாவலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அப்போட்டியில் சம்பியனாக தெரிவான நேகம நிவ் ஸ்டார் அணியை படத்தில் காணலாம்.

(படம்: கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

## மகளிர் உலகக் கிண்ணம்:

# மோசமான நடத்தை பற்றி விசாரிக்க பி∴பா தீர்மானம்



மகளிர் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஸ்பெயின் கால்பந்து சம்மேளன தலைவர் லுவிஸ் ருபியல்ஸின் நடத்தை தொடர்பில் சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பி∴பா) ஒழுக்காற்று விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி ஸ்பெயின் உலகக் கிண்ணத்தை வென்றதை அடுத்து ருபியல்ஸ், முன்கள வீராங்கனை ஜென்னி ஹெர்மோசோவுக்கு உதட்டில் முத்தம் கொடுத்திருந்தார்.

முன்னதாக போட்டியின் இறுதி விசில் ஊதப்பட்டதை அடுத்து அவர் தனது மர்ம உறுப்பை பிடித்து செய்கை செய்தார்.

இந்நிலையில் ருபியல்ஸ் தனது பதவியில் இருந்து விலகப்போவதாகவும் தனது முடிவு பற்றி சகாக்களுக்கு ஏற்கனவே தெரிவித்திருப்பதாகவும் ஸ்பெயின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் அவரது நடத்தை ஒழுக்கவிதியின் 13 ஆவது பிரிவை மீறுகிறதா என்பது பற்றி பி∴பா விசாரணையை ஆரம்பித்துள்ளது.

“பி∴பா அனைத்து தனிநபர்களின் ஒருமைப்பாட்டையும் மதிப்பதில் அதன் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துகிறது என்பதோடு மாறாக எந்த நடத்தையையும் கடுமையாக கண்டிக்கிறது” என்று அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ருபியல்ஸ் தனது நடத்தைக்காக ஏற்கனவே மன்னிப்புக் கேட்டபோதும் அது போதுமானதாக இல்லை என்று ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்சேஸ் தெரிவித்துள்ளார்.

அவரை பதவி விலகும் அழைப்பில் இரண்டாவது பிரதிப் பிரதமர் யொலன்டா டையஸூம் இணைந்துள்ளார்.

# குசல், அவிஷ்கவுக்கு கொவிட்–19 தொற்று



இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களான அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் குசல் பெரேரா இருவரும் கொவிட்–19 தொற்றுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் குசல் பெரேரா ஆகியோர் அண்மையில் நடந்த லங்கா பிரீமியர் லீக் தொடரில் தம்புள்ளை அவுரா அணிக்காக விளையாடியிருந்தனர்.

இவர்கள் இருவரில் குசல் பெரேரா மாத்திரம் ஆசியக் கிண்ணத்துக்கான குழாத்தில் இடம்பிடித்திருந்ததுடன், அவிஷ்க பெர்னாண்டோவுக்கு அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்நிலையில் கொவிட்–19 தொற்று ஏற்பட்டிருந்தாலும் ஆசியக் கிண்ணத் தொடரில் குசல் பெரேரா விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலங்களில் கொவிட்–19 தொற்றுக்கு இறுக்கமான கட்டுப்பாடுகளை சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் விதித்திருந்த போதும், தற்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. எனவே குசல் பெரேரா அணியில் தொடர்ந்தும் தக்கவைக்கப்படுவார் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும் ஆசியக் கிண்ணத் தொடருக்கான இலங்கையின் முதற்கட்ட குழாத்தில் லசித் குரூஸ்புள்ளே மற்றும் ஷெவோன் டேனியல் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் இருவரும் நடந்து முடிந்த எல்.பி.எல் தொடரில் கோல் டைட்டன்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக செயற்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# த்ரில் வெற்றியுடன் தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்



கடைசி ஓவர் வரை போராடி ஆப்கான் அணியை 1 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி த்ரில் வெற்றியை பெற்ற பாகிஸ்தான் அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரையும் 2–0 என கைப்பற்றியது.

ஹம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் (24) நடைபெற்ற இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி ஆரம்ப வீரராக வந்த ரஹ்மானுல்லா குர்பாஸின் அபார ஆட்டத்தால் 50 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது குர்பாஸ் மற்றும் இப்ராஹிம் சத்ரான் முதல் விக்கெட்டுக்கு 227 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர். குர்பாஸ் 151 பந்துகளில் 151 ஓட்டங்களை பெற்றதோடு சத்ரான் 80 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த பாகிஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர் இமாமுல் ஹக் 91 ஓட்டங்களை பெற்றபோதும் முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி கடைசி ஓவருக்கு 1 விக்கெட் கைவசம் இருக்க 11 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது. இதன்போது அந்த அணி ஐந்து பந்துகளில் இலக்கை எட்டியது.

இலங்கையில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரின் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று (26) கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சலாவுக்கு சவூதியின் இத்திஹாட் வலைவீச்சு




லிவர்பூல் கோல் மன்னன் முஹமது சலாவைப் பெறுவதற்கு சவூதி அரேபியாவின் அல்–இத்திஹாட் அணி ஆர்வம் காட்டியுள்ளது.

31 வயது சலா, கடந்த 2017இல் ரோமாவிலிருந்து லிவர்பூலில் இணைந்தார். லிவர்பூலில் அவர் இதுவரை 307 ஆட்டங்களில் 187 கோல்கள் அடித்துள்ளார். 80 கோல்கள் போட உதவியுள்ளார். இங்கிலீஷ் பிரிமியர் லீக்கின் புதிய பருவத்துக்கான முதல் ஆட்டத்தில் களமிறங்கி கோலும் புகுத்தினார்.

லிவர்பூலில் கடந்த ஜூலை மாதம் தமது புதிய ஒப்பந்தத்தில் சாலா கையெழுத்திட்டார். எனவே அவர் அணியை விட்டு வெளியேற வாய்ப்பில்லை என்று அவரது அதிகாரி ஏற்கனவே கூறியிருந்தார்.

ஆனாலும் சவூதி அணியான அல்–இத்திஹாட் எகிப்தியரான சாலாவை விடுவதாக இல்லை என்று ஸ்கை ஸ்போட்ஸ் செய்தி கூறுகிறது.

அல்–இத்திஹாட் சாலாவைப் பெற்றுவிடமுடியாது என்பதில் லிவர்பூல் உறுதியாக உள்ளது.

ஆனால், சவூதி அரேபிய அணிக்கு மாறினால் அந்த அணி தமக்கு என்ன கொடுக்கும் என்பதை அறிந்துகொள்ள சாலா ஆர்வம் காட்டலாம் என்று கூறப்படுகிறது.

ஒருவேளை சாலா அணிமாறிச் சென்றால் சவூதி ப்ரோ லீக்கில் அதிக சம்பளம் பெறும் வீரராக அவரை மாற்ற அல்–இத்திஹாட் தயாராக இருப்பதாக டெய்லி மெயில் தகவல் வெளியிட்டுள்ளது.

# இங்கிலாந்து கவுன்டியில் ஆட செல்கிறார் அசித்த



இலங்கை வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ இந்தப் பருவத்தில் இங்கிலாந்து கவுன்டி கிரிக்கெட்டில் ஆடுவதற்கு ஒப்பந்தமாகவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.


எதிர்வரும் செப்டெம்பரில் நடைபெறும் இங்கிலாந்து மற்றும் வெல்ஸ் கிரிக்கெட் சபையின் கவுன்டி சம்பியன்சிப் தொடரில் நொட்டின்ஹம்ஷயர் கவுன்டி கிரிக்கெட் கழகத்துடன் அவர் ஒப்பந்தமாக வாய்ப்பு இருப்பதாக கிரிக்கெட் வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

இலங்கை அணி இந்த பருவத்தின் இந்த ஆண்டில் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடாத நிலையில் இலங்கை டெஸ்ட் அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ இங்கிலாந்தில் ஆட திட்டமிட்டுள்ளார்.

மறுபுறம் டெஸ்ட் சம்பியன்சிப்பின் ஓர் அங்கமாக இலங்கை அணி அடுத்த ஆண்டு இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேநேரம் ஓய்வுபெற்ற இலங்கை வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மாலும் தற்போது டெர்பிஷயர் கவுன்டி கிரிக்கெட் கழகத்திற்காக இங்கிலாந்து கவுன்டி சம்பியன்சிப் போட்டியில் ஆடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் இலங்கை தேசிய அணிக்காக 12 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் விளையாடி 35 விக்கெட்டுகளை சாய்த்துள்ளதுடன், 63 முதற்தர போட்டிகளில் 193 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணத்திற்கு சின்னங்கள் அறிமுகம்



இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கான சின்னங்களை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்துள்ளது.

அதன்படி பெயரிடப்படாது அறிமுகப்படுத்தப்பட்ட உலகக் கிண்ண சின்னங்களில் ஆண் பாத்திரம் ஒன்றும் பெண் பாத்திரம் ஒன்றும் காணப்படுகின்றன.

அதேவேளை, இந்த பாத்திரங்கள் ஆண், பெண் என இருபாலாரும் கிரிக்கெட் விளையாட்டின் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் சிறப்பாக செயற்படுவதற்கு கொண்டிருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவதனை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த சின்னங்கள் தொடர்பில் ஐ.சி.சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் ஆண், பெண் பாத்திர சின்னங்கள் பாலின சமத்துவத்தினையும், பல்லினத் தன்மையினையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

ஐ.சி.சி கடந்த 2011ஆம் ஆண்டில் இருந்து தமது உலகக் கிண்ணத் தொடர்களுக்காக சின்னங்களை அறிமுகம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.